விலை: 30.00
பக்கங்கள் : இருபது
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 19 வெள்ளிக்கிழமை (04.12.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 351

MoneyGram
WESTERN UNION WU
Ria
Moving Money for better
உறவுகளிடமிருந்து Western Union, MoneyGram, Ria மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள...
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப...
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 2670 Fax: 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:Srimurugan09@gmail.com
(C-761)

## புலிகளுக்கு சார்பாக செயற்பட்டால் கூட்டமைப்பை தடை செய்வோம்

### பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர பாராளுமன்றத்தில் பகிரங்க எச்சரிக்கை



(கொழும்பு)
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தொடர்ந்தும் விடுதலைப் புலிகளுக்கு சார்பாக செயற்பட்டால் கட்சி 19

## மாவீரர் தினத்தன்று 'புரேவி' தாக்கியிருந்தால்

### சந்தோசமடைந்திருப்பேன் சபையில் சரத் பொன்சேகா

3ஆம் பக்கம் பார்க்க

## 'புரேவி' புயலால் வடக்கில் கடும் பாதிப்பு





- மழை வெள்ளத்தில் வீழ்ந்து ஒருவர் உயிரிழப்பு.
- இருவர் காணாமல் போயுள்ளனர்.
- சூறாவளி காரணமாக 5 பேர் காயமைடைந்துள்ளனர்.
- சுமார் 17ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 60 ஆயிரத்துக்கு அதிகமானோர் பாதிப்பு.
- 50 வீடுகள் முழுமையாக சேதம். 2,300 வீடுகள் பகுதியளவில் சேதம். (19ஆம் பக்கம் பார்க்க)

பொன்னாலை கடலில்

## காணாமல்போன மீனவர் நேற்று சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)
பொன்னாலை கடலில் காணாமல்போன மீனவர் காரைநகர் ஊரி கடலில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
நேற்று வியாழக்கிழமை இரவு 19

எதிர்வரும் 7ஆம் திகதி

## மற்றொரு தாழமுக்கம்

(யாழ்ப்பாணம்)
வங்காள விரிகுடாவில் இலங்கைக்கு தென்கிழக்கு திசையில் அந்தமான் தீவுகளுக்கு அண்மையாக மற்றொரு தாழமுக்கம் எதிர்வரும் 7ஆம் 19

இலங்கையை விட்டு

## 'புரேவி' புயல் நீங்கி விட்டது

### எனினும் எச்சரிக்கையாக இருங்கள்

(யாழ்ப்பாணம்)
"புரேவி" புயல் இலங்கையை விட்டு நீங்கிச் சென்று விட்டது. மன்னாருக் 19

முல்லை - நந்திக் கடலில்

## வள்ளத்தை மீட்க சென்றவரை காணவில்லை

(பனிக்கன்குளம்)
முல்லைத்தீவில் நந்திக் கடலில் காற்றில் அடித்து செல்லப்பட்ட வள்ளத்தை மீட்க சென்ற ஒருவர் காணாமல் போயுள்ளார். 19

## தேசிய தேர்தல் ஆணைக்குழுவுக்கு


புதிய தலைவர் நியமனம்

(கொழும்பு)
தேசிய தேர்தல் ஆணைக்குழுவின் புதிய தலைவராக நிமல் புஞ்சிஹேவ நியமிக்கப்பட்டுள்ளார்.
ஜனாதிபதி கோட்டாபய ராஜ 19

### 'புரேவி'யின் தாண்டவத்தின் பதிவுகள் உள்ளே







(09, 10, 11ஆம் பக்கங்களில்)

## பருத்தித்துறையில் ஒருவருக்கு கொரோனா

### கொழும்பு சென்று திரும்பியவர்

(கரணவாய்)
பருத்தித்துறை ஓடக்கரையைச் சேர்ந்த ஒருவருக்கு கொரோனா தொற்று உள்ளமை நேற்று வியாழக்கிழமை கண்டறியப்பட் 19

## வெள்ளத்தில் தவறி விழுந்தவர் உயிரிழப்பு

### கொடிகாமத்தில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)
தென்மராட்சி - கொடிகாமம் பகுதியில் ஒருவர் வெள்ளத்தில் தவறி 19

## திருடனின் மனிதாபிமானம்

சாவகச்சேரியில் சுவாரஸ்யம்

(யாழ்ப்பாணம்)
யாழ்.சாவகச்சேரியில் வீடு புகுந்து திருடுவதற்காக சென்றிருந்த 19

## கொரோனாவால் நாட்டில் மேலும் ஐவர் உயிரிழப்பு

### நேற்றும் +627 பேர் பாதிப்பு

(கொழும்பு)
நாட்டில் நேற்று வியாழக்கிழமை கோவிட் - 19 நோயாளிகள் ஐவர் உயிரிழந்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. 19

# அரசியல் கைதிகள் அனைவருக்கும் பிணை வழங்கி விடுவிக்க வேண்டும்

## நீதி அமைச்சருடனான சந்திப்பில் வலியுறுத்தவுள்ளார் அங்கஜன் எம்.பி

(யாழ்ப்பாணம்)

தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் உடனடியாகப் பிணையில் விடுவிப்பதுடன், அவர்கள் மீதான குற்றப்பத்திரிகை மீதான விசாரணையை துரிதப்படுத்தவேண்டும் என்று நீதி அமைச்சர், அலி சப்ரியிடம் யாழ்ப்பாணம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் வலியுறுத்தவுள்ளார்.

இதுதொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் ஊடகப் பிரிவு அனுப்பிவைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் அரசுடன் பேச்சு நடத்தி தீர்வொன்றை பெற்றுக்கொள்ளும் நோக்கில் பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளரும் யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான அங்கஜன் இராமநாதனின் வேண்டுகோளிற்கு ஏற்ப நீதி அமைச்சர் அலிசப்ரிதலைமையில் ஆளும் கட்சி சிறுபான்மையின பாராளுமன்ற உறுப்பினர்களின் பங்கேற்புடன் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணி க்கு பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் சந்திப்பு ஒன்று நடைபெறவுள்ளது.

சந்திப்பு மூலமாக நீண்டகாலமாக இழுபறியில் காணப்படும் தமிழ் அரசியல்கைதிகளின் விடுதலை தொடர்பில் தீர்வு ஒன்று எடுக்கப்படும் என பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 5 ஆண்டுகளாகத் தடுத்துவைக்கப்பட்டிருந்த பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தனுக்கு (பிள்ளையான்) பிணை வழங் கப் பயன் படுத்தப்பட்ட சட்ட ஏற்பாட்டின் கீழ் தமிழ் அரசியல் கைதிகள் அனைவருக்கும் பிணை வழங்கப்படவேண்டும் என்று நீதி அமைச்சரிடம் வலியுறுத்தப்படும் என்றும் அங்கஜன் இராமநாதன் குறிப்பிட்டார் என்றுள்ளது. (ம-03)

# விமான நிலையங்களை திறப்பதற்குத் திட்டம்

## அமைச்சர் ரணதுங்க தெரிவிப்பு

(கொழும்பு)

வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் இலங்கைக்கு வருவதற்கு ஏதுவாக விமான நிலையங்களை மீண்டும் திறப்பதற்கு திட்டமிடப்பட்டிருப்பதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

சுற்றுலாத்துறை அமைச்சு தொடர்பான அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி சுகாதார அதிகாரிகளின் அனுமதி கிடைத்தவுடன் சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய விமான நிலையங்களை திறக்க முடியும் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இது தொடர்பாக சுகாதார அமைச்சின் அதிகாரிகளுடன் கலந்துரையாடல் நடத்தப்படவிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-03)

# வவுனியாவில் குளங்கள் உடைப்பு

## 275 ஏக்கருக்கு அதிகமான நெற்பயிர்கள் நீரில் மூழ்கியது

(வவுனியா)

வவுனியாவில் பெய்துவரும் கடும் மழை காரணமாக இரண்டு குளங்கள் உடைப்பெடுத்துள்ளதுடன் அதன் கீழ் செய்கை பண்ணப்பட்டிருந்த 275 ஏக்கருக்கும் அதிகமான நெற்பயிர்கள் நீரில் மூழ்கி அழிவடைந்துள்ளது.

வங்காள விரிகுடாவில் உருவாகிய "புரேவி" புயல் காரணமாக வவுனியா மாவட்டத்தில் நேற்று முன்தினம் முதல் காற்றுடன் கூடிய கன மழை பொழிந்து வருகின்றது.

கனமழை காரணமாக மாவட்டத்தில் அனேகமான குளங்களின் நீர் மட்டம் சடுதியாக அதிகரித்துள்ளதுடன் வவுனியா வடக்கில் அனைத்து குளங்களும் முழுகொள்ளவை எட்டியநிலையில் மேலதிக நீர் வெளியேறி வருகின்றது.

இந்நிலையில் வவுனியா வடக்கு பகுதியில் அமைந்துள்ள இலுப்பைக்குளம் மற்றும் ஏம்பன் குளத்தின் அணைக் கட்டுகளில் அதிக நீர் வரத்து காரணமாக உடைவு ஏற்பட்டுள்ளமையால் அதன் கீழ் செய்கை பண்ணப்பட்டிருந்த 275 ஏக்கருக்கும் அதிகமான நெற்பயிர்கள் நீரில் மூழ்கி அழிவடைந்துள்ளது.

இலுப்பைக்குளத்தின் கீழ் செய்கை பண்ணப்பட்டிருந்த 245 ஏக்கர் வயல் நிலங்களும், ஏம்பன் குளத்தின் கீழ் 30 ஏக்கர் நெற்பயிர்களும் இவ்வாறு அழிவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-03,299)

# கிளிநொச்சியில் நீர்வெட்டு இன்றுமுதல் அமுல்

(முறிகண்டி)

கிளிநொச்சி மாவட்டத்தின் சில இடங்களில் இன்றுமுதல் நீர்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும் என நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை அறிவித்துள்ளது.

மழை வெள்ளம் காரணமாக கிளிநொச்சி குளத்தின் நீர் கலங்கலாக உள்ளமையால் நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினால் போதியளவு நீரை சுத்திகரிக்க முடியாது உள்ளமையால் இன்றிலிருந்து சில இடங்களில் நீர்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-03,100)


## பணிநிலை வேண்டுகை

**நோபள் இன்ரநசனல் பேப்பர் லங்கா (தனி) கம்பனி**

அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் இயங்கும் காகித உற்பத்தி தொழிற்சாலைக்கு பின்வரும் பதவி நிலைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

**ஹற்பத்தி தொழிலாளர்**

கல்வித் தகைமை : G.C.E O/L

முன் அனுபவம் உள்ளவர்கட்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**காவல் உத்தியோகத்தர்**

கல்வித் தகைமை : G.C.E O/L

முன் அனுபவம் விரும்பப்படும்.

**துப்பரவுப் பணியாளர்**

கல்வித் தகைமை : ஆண்டு 9 சித்தி

**மேற்படி தகைமை உடையவர்கள் எமது நிறுவனத்தில் நடைபெறும் நேர்முகத் தேர்வுக்கு 07.12.2020 அன்று மு.ப 10.00 மணிக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள்.**

(C-830)

**நோபள் இன்ரநசனல் பேப்பர் லங்கா (தனி) கம்பனி**

**கைத்தொழில் பேட்டை - அச்சுவேலி.**

**தொ. பே. 021 221 3000**


## பாதுகாப்பு அமைச்சுக்கான ஒதுக்கீட்டில்

# வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் வெளியேறியது தமிழ் அரசுக் கட்சி

(கொழும்பு)

வரவு - செலவு திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சின் ஒதுக்கீடு தொடர்பான விவாதத்தின் இறுதியில் நேற்று வாக்கெடுப்பு இடம்பெற்றது.

பாதுகாப்பு அமைச்சிற்கான ஒதுக்கீடு தொடர்பில் வாக்கெடுப்பை, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கோரியது.

ஆதரவாக 137 வாக்குகள் அளிக்கப்பட்டன. எதிராக அகில இலங்கை தமிழ் காங்கிரசின் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன், ரெலோவின் செல்வம் அடைக்கலநாதன், வினோநோகராதலிங்கம், கோவிந்தன் கருணாகரம் ஆகிய 5 பேரும் வாக்களித்தனர்.

இதேவேளை, வாக்களிக்காமல் சிறீதரன் உள்ளிட்ட இலங்கை தமிழ் அரசு கட்சியினர் வெளியேறி சென்றனர்.

சி.சிறீதரன், இரா.சாணக்கியன், த.கலையரசன் ஆகியோர் வாக்களிப்பில் கலந்து கொள்ளாமல் வெளியேறி சென்றனர்.

கூட்டமைப்பின் ஏனைய எம்.பிக்களான இரா.சம்பந்தன், த.சித்தார்த்தன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும், தமிழ் மக்கள் கூட்டணியின் எம்.பி யானசி.வி.விக்னேஸ்வரனும் நேற்றைய அமர்வில் கலந்து கொள்ளவில்லை. (ம-03)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் 402 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு மற்றும் துணுக்காய் பிரதேசங்களில் அதிகளவான மழைவீழ்ச்சி பதிவாகியுள்ள நிலையில் குறித்த பகுதிகள் வெள்ளகாடாக காட்சியளிக்கிறது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிகப்படியாக 402 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. அதிகப்படியாக துணுக்காய் மாந்தை கிழக்கு பிரதேசங்களிலேயே இந்த மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.


வயல் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. தாழ் நிலப்பகுதிகள் எங்கும் வெள்ளம் காணப்படுவதோடு குளங்கள் வான் பாயும் நிலையில் போக்குவரத்து இடர்பாடுகளும் காணப்படுகிறது.

மாந்தை கிழக்கில் ஆறு குளங்கள் வான்பாய்கின்றன. கிராமத்திற்குள் புகுந்த மழை வெள்ளத்தினை பிரதேச செயலக மற்றும் பிரதேச சபையினர் இணைந்து வடிகால் அமைப்பினை சீர்செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்கள். (ம-03,281)

# புரேவி புயல் தாக்கம்

## 15 ஆயிரத்து 643 பேர் பாதிப்பு

### அரச அதிபர் மகேசன் தகவல்



(நல்லூர்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போதுவரை 4 ஆயிரத்து 605 குடும்பங்களை சேர்ந்த 15 ஆயிரத்து 643 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் இடரால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளை அரசாங்க அதிபர் உள்ளிட்ட குழுவினர் பார்வையிட்டுள்ளனர்.

இதன்போது பலாலி - அன்ரனிபுரத்தில் வைத்து தற்போதைய நிலைமை குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் தற்போது 21 இடைத்தங்கல் முகாம்கள் அமைக்கப்பட்டு 720 குடும்பங்களை சேர்ந்த 2 ஆயிரத்து 605 நபர்கள் தங்கவைக்கப்பட் டுள்ளதாகவும் 16 வீடுகள் முழுமையாகவும், ஆயிரத்து 256 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இடரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அத்தியாவசிய தேவைகள் மற்றும் உணவுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் தொண்டைமானாறு தடுப்பு அணையின் 8 கதவுகள் திறக்கப்பட்ட போதும் கடல் மட்டம் உயர்ந்துள்ளதால் நீர் வடிந்து ஓடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும், மழை தொடர்வதால் வெள்ள நிலைமை அதிகரிக்கும் என மேலும் தெரிவித்துள்ளார். (5)

# பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவை மூட ஆலோசனை

(கொழும்பு)

சுயாதீன ஆணைக்குழுவான இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினை மூடி அதன் ஊழியர்களை மின்சக்தி அமைச்சு மற்றும் ஏனைய அரச நிறுவனங்களுக்கு உள்வாங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதியின் செயலாளர் பி.பி. ஜயசுந்தரவினால் கையொப்பமிடப்பட்ட கடிதமொன்று திறைசேரிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவித்துள்ளன.

இருப்பினும் குறித்த கடிதமானது உத்தியோகபூர்வமாக இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெறவில்லையென நம்பத்தகுந்த வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. 2021 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கே முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

தடைப்பட்டுள்ள மின் உற்பத்தி திட்டங்களை செயற்படுத்துவதற்கான திறமையான பணிச்சூழலை உருவாக்குவதற்கான மாற்றங்கள் குறித்தே முன்மொழிவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில் ஜனாதிபதியின் செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ள உத்தரவின் பிரகாரம் குறித்த கடிதம் திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிலுள்ள ஊழியர்களை, அவர்களின் தகைமைக்கு ஏற்ற வகையில், தேசிய திட்டமிடல் திணைக்களம் அல்லது மின்சக்தி அமைச்சு ஆகியவற்றுக்குள் உள்வாங்குமாறும் ஜனாதிபதியின் செயலாளர் கடிதம் மூலம் திறைசேரிக்கு அறிவித்துள்ளார்.

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் முன்னெடுக்கப்பட்ட விடயங்களை, நுகர்வோர் அதிகார சபை அல்லது மின்சார சபையின் ஊடாக பிரதியீடு செய்யும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தல் பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த நேரத்தில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவானது மூடப்படக்கூடாதென பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தனது டுவிட்டர் தளத்தில் தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வடக்கு, கிழக்கை தாக்கிய புயல் மாவீரர் தினத்தன்று தாக்கியிருக்கலாமே

## கவலையடையும் சரத் பொன்சேகா



(கொழும்பு)

இலங்கையின் வடக்கு, கிழக்கு பிரதேசத்தை ஊடறுத்துச் சென்ற சூறாவளி, கடந்த. வாரம் நடைபெற்ற மாவீரர் தினத்தின்போது வந்திருந்தால் சந்தோசமடைந்திருக்கலாம் என பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றும் போதே இதை குறிப்பிட்டார். தொடர்ந்து தெரிவிக்கையில்,

"சிவிலியன்கள் இறுதிப் போரில் கொலை செய்யப்படவில்லை. மாறாக விடுதலைப் புலிகள் இயக்கமே கட்டாயப்படுத்தி சிவிலியன்களை முன்னணியில் நிறுத்தி போராடினார்கள்.

அப்படியிருந்தும் நாங்கள் பலரையும் மீட்டோம். புனர் வாழ்வுக்கு அனுப்பினோம்.

இதேவேளை மாவீரர் தினத்தை கொண்டாட ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது.

இலங்கையின் வடக்கு, கிழக்கு பிரதேசத்தை ஊடறுத்துச் சென்ற சூறாவளி, கடந்த வாரம் நடைபெற்ற மாவீரர் தினத்தின்போது வந்திருந்தால் சந்தோசமடைந்திருக்கலாம்.

மக்களுக்கு சேதம் ஏற்படவேண்டும் என நான் கூறவில்லை. இருப்பினும் மாவீரர்கள் நினைவேந்தலை நடத்த அனுமதிக்க முடியாது.

இலங்கை உட்பட உலகின் பல நாடுகளிலும் விடுதலைப்புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்டதாகும்.

இங்கிலாந்தில் கூட பிரபாகரனின் பதாகையொன்று காட்சிக்கு வைக்கப்பட்ட போது பொலிஸாரினால் அகற்றப்பட்டது.

எமது நாட்டில் அது செய்திருந்தால் பாராளுமன்றத்திலும் எதிர்ப்பு வெளியிட்டிருப்பார்கள். எமது தரப்பிலுள்ள மனோ கணேசன் கூட மாவீரர் நாள் குறித்து நியாயப்படுத்தி கருத்து வெளியிட்டிருந்த போதிலும் அது அவருடைய தனிப்பட்ட கருத்தாகும்.

சிலர் ஜே.வி.பியுடன் மாவீரர்களை ஒப்பீடு செய்கிறார்கள். ஆனால் ஜே.வி.பியினர் மிகவும் சிறிதளவான போராட்டத்தை நடத்திய போதிலும் நாட்டைப் பிரிக்க செயற்படவில்லை.

மீண்டும் இந்த நாட்டில் பிரிவினைவாதத்தை தலைதூக்க இடமளிக்கமாட்டோம் என அவர் கூறினார். (நி-7)

# அரச பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்கிவிட்டது - சஜித்



(கொழும்பு)

மகர சிறையில் இடம் பெற்ற கலவரத்தின்போது அதனைக் கட்டுப்படுத்த கோட்டாபய - மகிந்த அரசாங்கம் எடுத்த முயற்சிகளைப் பார்க்கின்றபோது மீண்டும் அரச பயங்கரவாதம் நாட்டில் தலைதூக்கிவிட்டதா? என்கிற சந்தேகம் எழுந்திருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இதேவேளை வெலிக்கடை சிறையிலிருந்தே மகர சிறைச்சாலைக்கு கொரோனா வைரஸ் திட்டமிடப்பட்டு கொண்டு செல்லப்பட்டிருப்பதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

பாராளுமன்றம் நேற்றைய தினம் கூடியபோது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மகர சிறைச்சாலையில் இடம் பெற்ற கலவரம் மற்றும் அதன் பின்னணி குறித்து பரபரப்பு தகவல்களை வெளியிட்டார்.

கலவரம் குறித்து தொடர்ந்தும் கருத்துரைத்த அவர்,

அந்தக் கைதிகள் பி.சி.ஆர். பரிசோதனையை நடத்தும்படியே கோரியிருந்தனர். கைதிகளின் சுகாதாரத்திற்குப் பொறுப்பாகவுள்ள மருத்துவர் தான் வெலிக்கடை சிறையிலிருந்து 120 கைதிகளை மகர சிறைக்கு மாற்றியிருந்தார்.

அவர் வியத்மக என்கிற அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ஷவின் அமைப்பில் ஒரு அங்கத்தவர். அதன் காரணமாகவே மகர சிறையிலும் கொரோனா கொத்தணி ஏற்பட்டது.

எமது நாட்டில் அரச பயங்கரவாதம், கொலைக் கலாசாரத்தை தலைதூக்க நாங்கள் இடமளிக்கமாட்டோம்.

இரத்தம் காணும் வில்லை என்று சிலர் கூறுவதை நாங்கள் மறுக்கின்றோம், கண்டிக்கின்றோம் என அவர் தெரிவித்தார். (நி-7)

# இராசிபலன்

**04.12.2020**
**கார்த்திகை 19, வெள்ளிக்கிழமை**
**சதுர்த்தி முன்னிரவு 6.28 மணிவரை**
**புனர்பூசம் பிற்பகல் 12.46 மணிவரை**
**சுபநேரம் 6.15 - 7.45 மணிவரை**
**இராகுகாலம் 10.45 - 12.15 மணிவரை**
**சந்திராஷ்டமம்:- மூலம், பூராடம்** வளவன்


மேஷம்

பிள்ளைகளின் கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வழிபாட்டு சிந்தனை மேலோங்கும் நாள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.


ரிஷபம்

தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள் உடல் நலனில் கொஞ்சம் அக்கறை தேவை, செய்தொழிலை விரிபுபடுத்தும் எண்ணம் மேலோங்கும் நாள், உறவினர்களின் ஒத்துழைப்புண்டு.


மிதுனம்

நிலையான வருமானத்திற்கு வழியமைத்துச் செல்வீர்கள், வழிபாடு காரிய வெற்றி தரும், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும் நாள், உயரதிகாரிகளின் பாராட்டுக்கள் கிடைக்கும்.


கடகம்

வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முற்படுவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், போசன சுகமுண்டு.


சிம்மம்

தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகள் வெற்றிதரும், தேவையற்ற குழப்பங்களைத் தவிர்ப்பது நல்லது, மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும்.


கன்னி

காலைப் பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், புதிய திட்டங்கள் தீட்டி தொழிலில் ஆதாயம் காண முற்படுவீர்கள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.


துலாம்

தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம், உறவினர் வழியில் மன நிறைவான செய்தியொன்று வந்து சேரலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள்.


விருச்சிகம்

எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், பிரயாண பயமுண்டு.


தனுசு

நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, காரிய அனுகூலமுண்டு, பால்ய நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.


மகரம்

சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், புதிய பொருட்களை வாங்க முற்படுவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு.


கும்பம்

புதிய பொருட்களின் சேர்க்கையுண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நட்பு வட்டம் விரிவடையும் நாள், தாழ்ந்த சுபாவமுண்டு, செய்தொழிலில் முன்னேற்றமுண்டு.


மீனம்

புதிய நபர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், தொலைபேசி வழியில் பொன்னான செய்தியொன்று வந்து சேரலாம், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**அன்பு நிறைந்த இன்சொல் இரும்புக்கதவைக் கூட திறக்கும்**

# திட்டமிட்டவாறு யுத்தத்தை ஒழித்தேன்

## பொன்சேகா தம்பட்டம்



(கொழும்பு)

இராணுவத்தில் புதிய நுட்ப பயற்சிகளை அளித்தமையே யுத்த வெற்றிக்கு காரணமெனத் தெரிவித்த எதிரணி பாராளுமன்ற உறுப்பினர் சரத்பொன்சேகா, தான் தனிப்பட்ட முடிவுகளையும் பிரயத்தனங்களையும் மேற்கொண்டதனாலேயே, பயங்கரவாதத்தை தோற்கடிக்க முடிந்தது எனப் பெருமிதமடைந்தார்.

பாராளுமன்ற குழுநிலை விவாதத்தில் நேற்று உரையாற்றும் போது, அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்துரைத்த அவர், யுத்தத்தை குறிப்பிட்ட காலத்தில் முடிவுக்கு கொண்டுவருவதாக தான் உறுதியளித்தவாறு அதனை முடிவுக்கு கொண்டுவந்தேன். திட்டமிட்ட செயற்பாடுகளே அதற்குக் காரணம் எனவும் கூறினார்.

அத்துடன், இறுதி யுத்தத்தின்போது 45 ஆயிரம் பொது மக்கள் கொலைசெய்யப்பட்டதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டை மறுப்பதாகத் தெரிவித்த அவர், சுமார் ஐந்து, ஆறு ஆயிரம் பேர் வரை தவறுதலாக உயிரிழந்திருக்கலாம் எனக் குறிப்பிட்டதுடன், 2 இலட்சத்து 70 ஆயிரம் பேரைப் பாதுகாக்க முடிந்ததாகவும் பயங்கரவாதத்தில் ஈடுபட்ட 12 ஆயிரம் பேருக்குப் புனர்வாழ்வு அளித்ததாகவும் தெரிவித்தார். (ஐ)

# மாத்தளை மேயர் பதவி நீக்கம் வர்த்தமானி வெளியீடு



(மாத்தளை)

மாத்தளை மேயராக கடமையாற்றிய டல்ஜித் அலுவிஹாரேவை அந்த பதவியில் இருந்து நீக்குவதாக மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகேவால் குறித்த விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

முன்னதாக, மாத்தளை மேயர் பதவியில் டல்ஜித் அலுவிஹார, நீடிப்பதற்கு மத்திய மாகாண ஆளுநரால் தற்காலிக தடை விதிக்கப்பட்டது.

அதன்பின்னர், டல்ஜித் அலுவிஹாரேவின் நடவடிக்கைகள் தொடர்பில் விசாரணை செய்வதற்கு ஓய்வு பெற்ற மேல்நீதிமன்ற நீதிபதி குசலா சரோஜினி வீரவர்தனவின் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டது.

அந்தக் குழுவின் அறிக்கைக்கு அமைய, நேற்று முன்தினம் முதல் நடைமுறைக்கு வரும் வகையில் டல்ஜித் அலுவிஹாரே பதவிநீக்கம் செய்யப்பட்டுள்ளார். (ஐ)

# JOB வேலை வாய்ப்புகள்


தேசிய அறுவடைக்குப் பின்னரான முகாமைத்துவ நிறுவனத்தில்

## வெற்றிடங்களை நிரப்பல்

(கமத்தொழில் அமைச்சு)

கீழேயுள்ள பதவிகள் தொடர்பாக இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

(01) ஆராய்ச்சி அலுவலர் (03 பதவிகள்)
(02) பொறிமுறை பொறியியலாளர் (01 பதவி)
(03) செயற்றிட்ட அலுவலர் (01 பதவி)
(04) நூலகப் பொறுப்பாளர் (01 பதவி)
(05) பொறியியல் உதவியாளர் (சிவில்) (01 பதவி)
(06) பொறியியல் உதவியாளர் (பொறிமுறை/ மின்சாரம்) (01 பதவி)
(07) செயற்றிட்ட உதவியாளர் (03 பதவிகள்)

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்குத் தேவைப்படும் தகைமைகள் மற்றும் சம்பள அளவுத்திட்டம், தேசிய, அறுவடைக்குப் பின்னரான முகாமைத்துவ நிறுவனத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் காட்டப்பட்டுள்ளது. www.niphm.gov.lk

**பொது நிபந்தனைகள்**

1. இலங்கை பிரசையொருவராக இருத்தல் வேண்டும்.
2. அரசாங்க அல்லது கூட்டுத்தாபன/ நியதிச் சபைகளில் தற்போது தொழில் புரியும் நபர்கள், தமது விண்ணப்பங்களை உரித்தான திணைக்களம் அல்லது நிறுவன தலைவர்கள் மூலம் சமர்ப்பிக்க வேண்டும்.
3. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர், 1956 இலக்கம் 22 அரசாங்க மொழிக் கொள்கை செயற்பாட்டில் ஈடுபடுவது தொடர்பாக, தற்போதுள்ள சட்டங்களுக்கும் கட்டுப்படல் வேண்டும்.
4. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நியமிக்கப்படும் நாள் தொடக்கம் மாதச் சம்பளத்தின் 10% ஐ ஊழியர் சேமலாப நிதியத்திற்குச் செலுத்த வேண்டும். நிறுவனமானது சேமலாப நிதியத்திற்கு மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு முறையே 1% மற்றும் 3 % பங்களிப்புச் செய்யும்.

குறித்த சான்றிதழ்களின் போட்டோ பிரதிகள் மற்றும் விண்ணப்பதாரர் அறியும், உறவினரல்லாத நபர்கள் இருவரின் பெயர் மற்றும் முகவரிகளுடன் கூடியதாக விண்ணப்பதாரரால் சுயமாகத் தயாரிக்கப்பட்ட சுயவிபரக் கோவையை உள்ளடக்கிய விண்ணப்பமொன்றை பதிவுத் தபாலில், 2020.12.24 அன்று அல்லது அதற்கு முன்னர், கிடைக்கக் கூடியவாறு தலைவர், தேசிய, அறுவடைக்குப் பின்னரான முகாமைத்துவ நிறுவனம், ஜயந்தி மாவத்தை, அநுராதபுரம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை மேற்கொள்ளுங்கள். தபாலுறையின் இடது பக்க மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைத் தெளிவாகக் குறிப்பிடுங்கள்.

**தலைவர்,**
**தேசிய, அறுவடைக்குப் பின்னரான முகாமைத்துவ,**
**நிறுவனம்,**
**ஜயந்தி மாவத்தை, அநுராதபுரம்.**

# குணமடைந்த பின்னரும் நுரையீரலை தாக்கும் கொரோனா

(கொழும்பு)

**கொரோனா வைரஸ் தொற்றிய நபர்கள் குண மடைந்து, மூன்று மாதத்திற்கு மேற்பட்ட காலத்தின் பின்னரும் தொற்றாளர்களின் நுரையீரலுக்கு சேதம் ஏற்படக் கூடும் என தெரியவந்துள்ளது.**


இங்கிலாந்தின் ஒக்ஸ் போர்ட் பல்கலைக்கழகத்தின் மருத்துவ குழுவினர் நடத்திய புதிய ஆய்விலிருந்து இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளது.

10 கொரோனா வைரஸ் தொற்றாளர்களை பயன்படுத்தி இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளது.

புதிய ஸ்கான் தொழில் நுட்பத்தை பயன்படுத்தி இந்த தொற்றாளர்களின் நுரையீரல்கள் பரிசோதிக்கப்பட்டுள்ளன.

இந்த பரிசோதனை முடிவுகளின் படி வழமையாக மேற்கொள்ளும் ஸ்கான் பரிசோதனைகளின் போது கண்டறிய முடியாத வகையில் தொற்றாளர்களின் நுரையீரல்களில் சேதம் ஏற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. (ஐ)

# தூக்கி வீசப்பட்ட அம்மாச்சி உணவக கூரை



(யாழ்ப்பாணம்)

நாட்டில் நிலவிவரும் சீரற்ற கால நிலையினால் வடக்கு - கிழக்கு மக்கள் பெரும் அனர்த்தங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

புரேவி புயலை அடுத்து தொடர்ந்து பெய்த மழையால் மக்கள் கடும் பாதிப்புக்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

அந்த வகையில், நாவற்குழியில் உள்ள அம்மாச்சி உணவகத்தின் கூரைகள் காற்றினால் தூக்கி வீசப்பட்டன. (5)

# 2 இலட்சத்து 31 ஆயிரம் வழக்குகள் மாவட்ட நீதிமன்றங்களில் கிடப்பில்

## நீதி அமைச்சர் தகவல்



(கொழும்பு)

நாட்டில் 2 இலட்சத்து 31 ஆயிரம் வழக்குகள் மாவட்ட நீதிமன்றங்களில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படாது உள்ளன என நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"நீதிச்சேவை ஆணைக்குழுவின் தரவுகளுக்கு அமைய இந்தத் தகவலை வெளியிடுகின்றேன்.

அதற்கமைய 49 ஆயிரத்து 801 வழக்குகள் ஐந்து வருடங்களாக விசாரணை செய்யப்படுகின்றன.

20 ஆயிரத்து 568 வழக்குகள் 5 முதல் 10 வருடங்களாக விசாரணை செய்யப்படுகின்றன.

8 ஆயிரத்து 947 வழக்குகள் 10 முதல் 15 வருடங்களாக விசாரணை செய்யப்படுகின்றன. 3 ஆயிரத்து 418 வழக்குகள் 15 முதல் 20 வருடங்களாக விசாரணை செய்யப்படுகின்றன.

அத்துடன், 4 ஆயிரத்து 620 வழக்குகள் 25 முதல் 25 வருடங்களாக விசாரணை செய்யப்படுகின்றன.

வழக்குத் தாக்கல் செய்தல் மற்றும் வழக்கு விசாரணை ஆகியன இரு வேறு விடயங்களாகும்.

கொரோனாத் தொற்று பரவும் காலப்பகுதியில் வழக்கு விசாரணைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இந்த நிலைமையின் கீழ் சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் 70 இற்கும் அதிகமான தீர்ப்புக்கள் இந்தக் காலப்பகுதியில் வழங்கப்பட்டுள்ளன" எனத் தெரிவித்தார். (ஐ)

# 200 வருட பாலைமரம் விழுந்து ஆலயம் சேதம்



(சாவகச்சேரி)

தென்மராட்சி-மீசாலை வடக்கு பகுதியில் உள்ள தட்டாங்குளம் வீதியில் இருநூறு வருடங்கள் பழைமையான பாலை மரம் ஒன்று நேற்று வியாழக்கிழமை அதிகாலை பாறி விழுந்துள்ளது.

கடும் மழையுடன் காற்று வீசிய போதே இவ் அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

மரம் விழுந்ததில் அருகில் காணப்பட்ட பழைமையான காளி கோவில் ஒன்று முழுமையாகச் சேதமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-30)

6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் திருமதி
சுந்தரலிங்கம் இராஜேஸ்வரி

மண் மகிழ 20.06.1948
விண் நெகிழ 10.12.2014

வையத்துள் வாழ்வாங்கு
நிறைவாழ்வு வாழ்ந்து
இறைவனின் திருப்பாதம்
தனில் சேர்ந்து இளைப்பாறும்
எம் குடும்ப குல விளக்கே!
ஆண்டுகள் ஆறு
ஆறாய்க் கடந்தது
உம் நினைவுகளுடன்
இன்றும் என்றும் நாம்

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.
(4839)
குடும்பத்தினர்

# புரேவிப் புயலால் மன்னாரில் 2,236 குடும்பங்கள் பாதிப்பு



(மன்னார்)

புரேவிப் புயல் காரணமாக மன்னார் மாவட்டத்தில் உள்ள 5 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் 2 ஆயிரத்து 236 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 749 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள் 15 நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளதோடு உறவினர்களின் வீடுகளிலும் தங்கியுள்ளனர்.

இதேவேளை காற்றுடன் கூடிய மழை காரணமாக தலைமன்னார், பேசாலை உட்பட மன்னார் மாவட்டத்தில் கடற்கரையோர பகுதிகளில் நிறுத்தி வைக்கப்பட்ட ஒரு தொகுதி படகுகள் சேதமாகி உள்ளன.

50 இழுவைப்படகுகள் (றோலர்), 200 இற்கும் மேற்பட்ட கண்ணாடியிழைப் படகுகள் மற்றும் 200 இற்கும் மேற்பட்ட வள்ளம் போன்றவை சேதத்திற்கு உள்ளாகி உள்ளன.


இதனால் பல இலட்சம் ரூபாய் நட்டத்தை மீனவர்கள் எதிர்நோக்கி உள்ளனர்.

மேலும் தலைமன்னார் பியர் கடற்கரையோரப்பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள படகுகள் சில காணாமல் போயுள்ளதுடன் படகுகள் வாடிகள், மீன்பிடி உபகரணங்கள் சேதத்திற்கு உள்ளாகியுள்ளதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர். (5-285)

# வைத்தியசாலைக்குள் புகுந்த வெள்ளம்

(நெளுக்குளம்)

"புரேவி" புயல் காரண மாக வவுனியா மாவட்டத் தில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதுடன், பலர் பாதுகாப்பான இடங்க ளில் தங்க வைக்கப்பட்டுள் ளனர்.



நெடுங்கேணி பிரதேச வைத்தியசாலைக்குள் வெள்ளநீர் உட்புகுந்துள்ள துடன், வைத்தியசாலை யின் மதிலும் உடைந்து விழுந்துள்ளது.

அத்துடன் நெடுங்கேணி யில் உள்ள கிராமிய கூட்டுறவு வங்கிக்குள்ளும் மழை நீர் சென்றுள்ளமையால் உத்தி யோகத்தர்கள் மழை நீரை வெளியேற்றும் பணியினை முன்னெடுத்தனர்.

குறிப்பாக மாவட்டத்தின் பல்வேறு தாழ்நிலப்பகுதி களில் வெள்ளநீர் சூழ்ந்து ள்ளதுடன், விவசாய காணி களும் நீரில் மூழ்கியுள் ளன.

ஏனைய பாதிப்புக்கள் தொடர்பாக பிரதேச செய லகங்கள் மற்றும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவினர் தகவல்களை சேக ரித்து வருகின்றனர். (5-299)

# குளங்களில் நீர் மட்டம் அதிகரிப்பு உடைப்பு ஏற்படாமல் நடவடிக்கை

(நெளுக்குளம்)

வவுனியாவில் கடந்த 24 மணித்தியாலத்தில் வவுனியா கனகராயன்குளம் பகுதியில் அதிக மழைவீழ்ச்சி பதிவாகி யுள்ளதாக வவுனியா மாவட்ட வானிலை அவதான நிலை யம் தெரிவித்துள்ளது.

வங்காள விரிகுடாவில் உருவாகிய "புரேவி" புயல் காரணமாக வவுனியா மாவட் டத்தில் நேற்று முன்தினம் முதல் காற்றுடன் கூடிய கன மழை பெய்து வருகிறது.

இந்நிலையில் நேற்றுக் காலை 8 மணிவரையான 24 மணிநேரத்தில் அதிகபட்சமாக கனகராயன்குளம் பகுதியில் 164 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் நெடுங்கேணி பகுதியில் 140 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவாகியுள்ள துடன்,

செட்டிகுளம் பகுதியில் 101 மில்லிமீற்றரும் ஓமந்தைப் பகுதியில் 100 மில்லிமீற்றரும் வவுனியா நகர்ப்பகுதியில் 87.5 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவாகியுள்ளதாக வவுனியா மாவட்ட வானிலை அவதான நிலையம் தெரிவித் துள்ளது.

இதேவேளை பெய்து வரும் கன மழை காரணமாக அநே கமான குளங்களின் நீர் மட்டம் சடுதியாக அதிகரித்துள்ளதுடன் வவுனியா வடக்கில் அனைத்து குளங்களும் முழு கொள்ள ளவை எட்டிய நிலையில் மேல திக நீர் வெளியேறி வருவதாக மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் உதவி ஆணையாளர் தெரிவித்தார்.

நெடுங்கேணி பட்டிக்குடி யிருப்புக்குளம் முழு கொள்ள ளவை எட்டி மேலதிக நீர் குள த்தின் அணைக்கட்டு வழியாக வெளியேறுவதாகவும் குளத் தில் உடைவு ஏற்படாமல் இருக்க இராணுவத்துடன் இணைந்து பராமரிப்பு நடவ டிக்கைகளை முன்னெடுத்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (5-299)

# மரத்துடன் மோதிய பாரவூர்தி சாரதி படுகாயம்

(வவுனியா)

வவுனியா கண்டி வீதியில் தபால் நிலையத்திற்கு முன்பாக பாரிய மரம் வீதியின் குறுக்காக சரிந்து வீழ்ந்தமையினால் அவ்வீதியினூடான போக்கு வரத்து ஸ்தம்பிதமடைந்துள்ளது.

இந்நிலையில் மரம் முறி ந்து வீழ்ந்துள்ளமையை அவ தானிக்காது வந்த பார ஊர் தியொன்று குறித்த மரத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியது. இதில் படுகாயமடைந்த சாரதி வவுனியா பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு ள்ளார்.

நேற்று அதிகாலை 3 மணி யளவில் கடும் காற்றுக் காரண மாக வீதியோரத்தில் நின்ற வாகை மரமொன்று வீதியின் குறுக்காக வீழ்ந்துள்ளது.

இந்நிலையில் அனர்த்தம் காரணமாக கடமையில் ஈடு பட்டிருந்த வவுனியா பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் நகரசபை ஊழியர்கள் குறித்த மரம் வீழ்ந்துள்ள இடத் தினைப் பார்வையிட்டு அகற் றும் செயற்பாட்டை முன்னெடு க்கச் சென்றிருந்தனர்.

இதன்போது கண்டி வீதி யால் யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த பார ஊர்தியொன்று வேகமாக வருவதை கண்ட பிரதேச செயலக உத்தியோ கத்தர்கள் கூக்குரல் இட்டும் மரத்தினை காட்டியும் சாரதிக்கு சைகை காட்டினர்.

எனினும் அதனை அவதா னிக்காத பார ஊர்தியின் சாரதி மரத்துடன் மோதி விபத்துக்குள் ளானார். இதனையடுத்து அங் கிருந்த பிரதேச செயலக உத்தி யோகத்தர்கள் தமது வாகனத் தில் காயமடைந்த சாரதியை வவுனியா பொது வைத்தியசா லைக்குக்கொண்டு சென்றனர்.

இந்நிலையில் ஏ-9 வீதி யின் போக்குவரத்து ஸ்தம்பிதம் அடைந்துள்ளதுடன் மரத் தினை அகற்றும் பணியினை வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் நகரசபை ஊழியர்கள் மேற்கொண்டனர். (5-299)

## புரேவிப் புயல்

# மக்களுக்கு உதவவென இரவு-பகல் சேவையில் உத்தியோகத்தர்கள்

(குருமன்காடு)

புரேவி புயல் தாக்கம் கார ணமாக பாதிப்புக்கள் ஏற்பட் டால் அவசர உதவிகள் மற்றும் அனர்த்த பாதுகாப்பு செயற் பாடுகளை முன்னெடுப்பத ற்காக வவுனியாவின் ஒவ் வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் உத்தியோகத்தர்கள் இரவு வேளையிலும் கடமை யில் ஈடுபடுத்தப்பட்ட னர்.

வவுனியா பிரதேச செயல கப் பிரிவுக்குட்பட்ட ஒவ் வொரு கிராம உத்தியோக த்தர் பிரி விலும் கிராம உத் தியோகத்தர் அல்லது அபிவிருத்தி உத் தியோகத்தர் அல்லது சமுர்த்தி அபிவிரு த்தி உத்தியோகத்தர் ஆகியோரில் ஒருவரை கிராம உத்தியோகத்தர் அலுவலகம் அல்லது அதற்கு அண்மித்த இடத்தில் தங்கிஇருக்குமாறும் பிரதேச செயலாளரால் வலி யுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் ஒவ்வொரு 2 மணித்தியாலயத்திற்கு ஒரு தடவை அங்குள்ள நிலைமை தொடர்பில் அறியத் தருமாறும் அறிவுறுத் தப்பட்டுள்ளது.

இதேபோன்று, வவுனியா வடக்கு, செட்டிகுளம் ஆகிய பிரதேச செயலக பிரிவுகளிலும் உத்தியோகத்தர்கள் கடமை யில் ஈடுபடுத்தப்பட்டனர்.

புயல் காரணமாக மக்க ளுக்கு ஏதாவது அனர்த்தம் அல்லது பாதிப்பு ஏற்பட மாக இருந்தால் உடனடி யாக அவர்களைத் தொடர்பு கொள்ளுமாறும், தேவை யான உதவிகளை வழங்க பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்ட செயலகம் என்பன தயாராகவுள்ள தாகவும் தெரிவிக்கப்பட்டது. (5-250)

# இரகசியத் தகவலையடுத்து நால்வர் கைது

## வெடி பொருட்கள் மீட்பு

(முறிகண்டி)

கிளிநொச்சி பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இயக்கச்சி பகுதியில் நால்வர் கைது செய் யப்பட்டுள்ளதுடன் வெடி பொரு ட்களும் மீட்கப்பட்டுள்ளன.



கிளிநொச்சி இயக்கச்சி பனிக்கையடி எனும் கிராம த்தில் சில வெடி பொருட்கள் பொதுமகன் ஒருவரின் வீட்டில் மறைத்து வைக்கப்பட்ட நிலை யில் இராணுவத்தினரால் மீட்கப்பட்டுள்ளன.

கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து குறித்த வீடு நேற்று இராணுவத்தினர், பொலிஸார், புலனாய்வாளர் களால் சுற்றி வளைக்கப்பட்டு நான்கு பேர் கைது செய்ய ப்பட்டுள்ளனர்.

பல மணிநேர தேடுதலில் பல வெடி பொருட்களையும் மீட்டுள்ளனர். கைது செய்யப் பட்டவர்கள் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முன்னிலைப்படுத் தப்படவுள்ளனர்.

மீட்கப்பட்ட வெடி பொருட் கள் கிளிநொச்சிமாவட்ட பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் செல் லப்பட்டுள்ளதாகவும் தெரிவிக் கப்படுகிறது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன. (5-100-312-316)

# கிளிநொச்சி மாவட்டத்தில் 1342 பேர் பாதிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரி இர ணைதீவு பகுதியில் 131 பேர் இரண்டு இடங்களிலே தங் கியிருப்பதாகவும். அவர்க ளுக்கு உடனடி உதவிப்பொரு ட்களை வழங்க விமானப் படையின் உதவியை கோர வுள்ளதாகவும் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரி வித்துள்ளார்.

செயலக மாநாட்டு மண் டபத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட த்திலே 455 குடும்பங்களை சேர்ந்த 1342 பேர் பாதிக்கப் பட்டுள்ளதாகவும், இதில் தற் காலிக வீடு ஒன்று முழு மையாக சேதமடைந்துள் ளதுடன், 135 வீடுகள் பகுதி அளவிலே சேதமடைந்து ள்ளதாகவும் அவர் சுட்டிக்கா ட்டியுள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்களி ற்கான தேவைகளை இன ங்கண்டு அவற்றை நிவ ர்த்தி செய்வதற்கான ஏற் பாடுகள் மேற்கொள்ளப்பட்டு ள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (5-315)

# சுகாதார அதிகாரியின் முகத்தில் உமிழ்ந்த தொற்றாளர்




(கொழும்பு)
அட்டுளுகம பிரதேசத்தில் கொரோனாத் தொற்றாளர் ஒருவர், பொது சுகாதார பரிசோதகர் அலுவலகரின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்துள்ளதுடன், குறித்த பரிசோதகரின் முகத்தில் எச்சில் துப்பியுள்ளாரென, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

பண்டாரகம-அட்டுளுகம பிரதேசத்தில் கடமைகளில் ஈடுபட்டிருந்த சுகாதார பரிசோதகர் ஒருவர், குறித்த பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்ட தொற்றாளர் ஒருவரை வைத்தியசாலைக்கு அனுப்பும் நடவடிக்கைகளில் ஈடுபட்ட போதே, அந்த தொற்றாளர் குறித்த அதிகாரியின் முகத்தில் உமிழ்ந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பண்டாரகம பொலிஸார் விரிவான விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ)

# யாழிலிருந்து மட்டக்களப்பிற்கு கஞ்சா கடத்திய இருவர் கைது



(மட்டக்களப்பு)
யாழ்ப்பாணத்தில் இருந்து மட்டக்களப்பிற்கு காரின் ஊடாக கேரளக் கஞ்சா கடத்திய இருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பில் நேற்று வியாழக்கிழமை அதிகாலை குறித்த சந்தேகநபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டதுடன் அவர்களிடமிருந்து 2 கிலோ 200 கிராம் கேரளக் கஞ்சாவை மீட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவு பதில் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவலொன்றின் அடிப்படையில், மட்டக்களப்பு மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவு பதில் பொறுப்பதிகாரி ஜே.எஸ்.ஏ.ஜெயசிங்க தலைமையிலான பொலிஸ் குழுவினர், சம்பவதினமான நேற்று அதிகாலை, மட்டக்களப்பு, திருகோணமலை வீதி வழியாக வந்த காரை நிறுத்தி சோதனை செய்த போது, மறைத்து வைக்கப்பட்ட நிலையில், 2 கிலோ 200 கிராம் கொண்ட கேரளக் கஞ்சாவை அதிலிருந்து மீட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஜ)


## யாழ்ப்பாணம் மாநகர சபை

### சிறியரக வாகனங்களினை வாடகைக்கு அமர்த்துவதற்கான கேள்விகள் கோரல்

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் இருந்து பணிக்கப்படுகின்ற வட்டாரங்களின் கடைகள் சந்தைகளில் வெளியேற்றப்படும் பிளாஸ்ரிக் மற்றும் இறைச்சி எலும்புகளினை எடுத்துச் சென்று கல்லுண்டாய் மற்றும் காக்கைதீவு வெளியிலுள்ள ஒதுக்கப்பட்ட இடத்தில் பறிப்பதற்கு சிறியரக வாகனம் தேவைப்படுகின்றது.

இச்சேவையினை வழங்கக்கூடிய வழங்குநர்கள் 14.12.2020 - 30.12.2020 ஆம் திகதிவரை சபையின் கொள்வனவுப்பகுதியுடன் தொடர்புகொண்டு கேள்விக்குரிய கூறுவிலைப்படிவங்களினைப் பெற்றுப் பூர்த்திசெய்து எதிர்வரும் 30.12.2020 ஆம் திகதி புதன்கிழமை 12.00 மணிக்கு முன்னதாக பதிவுத்தபாலில் அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

கேள்வி திறக்கும் திகதி: 30.12.2020, நேரம்: நண்பகல் 12.00 மணி. (C-827)

முதல்வர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.


# 25 பேர் கைது

(கொழும்பு)
கடந்த 24 மணித்தியாலங்களில் தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய குற்றச்சாட்டில் 25 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதாக பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண இதனைக் குறிப்பிட்டுள்ளார். (ரி-7)

## தம்பதியர் சடலமாக மீட்பு

(கொழும்பு)
மினுவாங்கொட ஓபாத பகுதியில் அமைந்துள்ள வீடொன்றில் இருந்து இருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர். கணவன் - மனைவி ஆகியோரின் சடலங்களே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கணவனால் மனைவி கொலை செய்யப்பட்டுள்ளதாகவும் பின்னர் கணவன் தனது உயிரை மாய்த்துக்கொண்டுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. (ஜ)


## கேள்வி அறிவித்தல்

### பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மணிமனை, கிளிநொச்சி (வடக்கு மாகாணம்) - 2020

1. தலைவர், பிராந்திய பெறுகைக்குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி அவர்கள், 2021 ஆம் ஆண்டிற்கான கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சேவை வழங்கலுக்கான இப்போது தகவுடையோரும் தகைமை பெற்றவருமான கேள்வியாளர்களிடம் இருந்து பொதியிடப்பட்ட விலைக்கேள்விகளைக் கோருகின்றார்.

| இல | சேவை விபரம் | குறிப்பு இலக்கம் | விண்ணப்பப் படிவம் விநியோகிக்கப்படும், பெற்றுக்கொள்ளப்படும், திறக்கப்படும் முகவரி | மீளளிக்கத்தக்க வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத வைப்புப் பணம் |
|---|---|---|---|---|---|
| 01 | வளிச்சீராக்கி (Air condition) சுத்திகரிப்பு மற்றும் திருத்தம் | NP/K/RDHS/AC/2021/01 | RDHS Office, A9 Road, Kilinochchi | 20,000.00 | Rs. 1000/- |
| 02 | நிழற்பிரதி (Photo copier) சுத்திகரிப்பு மற்றும் திருத்தம் | NP/K/RDHS/PC/2021/02 | RDHS Office, A9 Road, Kilinochchi | 10,000.00 | Rs. 500/- |

2. பெறுகை கோரலானது தேசிய போட்டி விலை பெறுகை முறைப்படி தனித்தனியாக மேற்கொள்ளப்படும்.

3. ஒப்பந்த அளிப்பு செய்வதற்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் கறுப்புப்பட்டியலில் இடம்பெறலாகாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

➢ விலைமனுதாரர் வலிதான வியாபாரப் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

➢ அத்துடன், மேற்குறிப்பிடப்பட்ட சேவை வழங்குவதற்கான அனுமதியினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

➢ அத்துடன், வடக்கு மாகாணத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்கள் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, A9 வீதி, கிளிநொச்சி, (தொலைபேசி இல 021228 5932 / 021222 5719) அவர்களிடமிருந்து மேலதிக தகவலைப்பெறலாம் என்பதுடன், இம் முகவரியில் காலை 9.00 மணியிலிருந்து பிற்பகல் 15.00 மணிவரை கேள்வி ஆவணங்களை பரிசோதனை செய்யலாம்.

5. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்களினால் ஆங்கில மொழி மூலமான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, A9 வீதி, கிளிநொச்சி எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 04.12.2020 ஆம் திகதி முதல் 16.12.2020 ஆம் திகதி வரை மு.ப 8.30 மணி தொடக்கம் பி.ப 15.00 மணிவரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான அட்டவணையில் குறிப்பிடப்பட்ட கட்டணத்தை செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

6. கேள்விகள் 17.12.2020 ஆம் திகதியன்று பிற்பகல் 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தலைவர், பிராந்திய கேள்விச்சபை, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, A9 வீதி, கிளிநொச்சி எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் ஒவ்வொரு வேலைகளுக்குமான கேள்வி இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். நேரடியாக கீழேயுள்ள முகவரியில் வருகைதரவிரும்பும் கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமூகத்தில் முடிவுறுத்தல் காலத்தின் பின் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும்.

7. பெறுகைக்கு முன்னரான கூட்டமொன்று திணைக்கள தலைவரின் கீழ்குறிப்பிட்டுள்ள அமைவிடத்தில் 15.12.2020 ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு நடைபெறும்.

8. மேற்குறிப்பிட்ட பெறுகைப் பிணைப்பணம் ஒவ்வொரு பெறுகைக்கும் தனித்தனியாக செலுத்தப்படல் வேண்டும்.

9. இவ் விலைமனுக்கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலுமோ இப்பூரண நடவடிக்கையிலிருந்து எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே இவ்விலைமனுகோரலை ரத்து செய்வதற்கு பெறுகைக் குழு தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

(C-828)

தலைவர்,
பிராந்திய பெறுகைக் குழு,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,
கிளிநொச்சி.

# 31 மனநல ஆலோசகர்கள் நியமனம்



(கொழும்பு)
உதவி மனநல ஆலோசகர்கள் மற்றும் மனநல ஆலோசக உதவியாளர்கள் 31 பேருக்கு பாதுகாப்புச் செயலாளர் கமால் குணரத்னவினால் புதிதாக நியமனக் கடிதங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு ராஜகிரியவில் உள்ள தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையில் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் மத்தியில் உரை நிகழ்த்திய பாதுகாப்புச் செயலாளர் "போதைப் பொருட்கள் அற்ற ஆரோக்கியமானமற்றும்பாதுகாப்பான தேசத்தை உருவாக்குவதற்காக முன்னின்று உழைத்த தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் ஊழியர்களின் அர்ப்பணிப்புடன் கூடிய செயற்பாட்டினை பாராட்டினார்.(ஐ)

# நியூசிலாந்து பாராளுமன்றில் இலங்கைப் பெண்

(வெலிங்ரன்)
நியூசிலாந்து பாராளுமன்றத்துக்கு தெரிவான முதல் இலங்கையைச் சேர்ந்த பெண் வனுஷி வால்டர்ஸ் நேற்று முன்தினம் புதன்கிழமை பாராளுமன்றில் தனது முதல் உரையினை நிகழ்த்தியுள்ளார்.



தனது உரையில் அவர் சிங்கள மற்றும் தமிழில் சுருக்கமான அறிக்கைகளை வெளியிட்டதுடன், மனித உரிமைகள் அனைவருக்கும் சொந்தமானது என்பதையும் நினைவுபடுத்தினார்.

கொழும்பின் முதல் மேயராக இருந்த சரவணமுத்துவின் பேர்த்திதான் வனுஷி வால்டர்ஸ்.

நியூசிலாந்து பாராளுமன்றத் தேர்தலில் பிரதமர் ஜெசிந்தா ஆர்டர்ன் தலைமையிலான தொழிலாளர் கட்சி அமோக வெற்றியை பெற்றது.

இத்தேர்தலில் வனுஷி வால்டர்ஸ் வெற்றி பெற்றுள்ளார். நியூசிலாந்து பாராளுமன்றத்துக்கு தேர்ந்தெடுக்கப்படும் முதல் தமிழர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார் வனுஷி வால்டர்ஸ் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சஹ்ரானுடன் தொடர்பு 12 பேரின் மறியல் நீடிப்பு




(கொழும்பு)
சஹ்ரான் ஹாசீமுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட 12 சந்தேகநபர்களை மீண்டும் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 16 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு கல்முனை நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

குறித்த வழக்கு நேற்று முன்தினம் புதன்கிழமை அம்பாறை மாவட்டம் கல்முனை நீதிமன்ற நீதவான் ஐ. என். றிஸ்வான் முன்னிலையில் இரு வேறு சந்தர்ப்பங்களில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன் போது காணொளி ஊடாக சந்தேகநபர்களிடம் விசாரணை மேற்கொள்ளப் பட்டதைத் தொடர்ந்து குறித்த 12 சந்தேக நபர்களையும் மீண்டும் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார். (ஐ)

# பாம்பு கடித்ததில் சிறுவன் மரணம்

(திருமலை)
திருகோணமலை - கிண்ணியாவில் 13 வயது சிறுவன் பாம்பு கடித்ததினால் விஷம் ஏறி மூச்சுத் திணறல் ஏற்பட்ட காரணத்தினால் மரணித்துள்ளதாக திருகோணமலை பொது வைத்தியசாலையின் சட்ட வைத்திய நிபுணர் மலிந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

சிறுவனின் சடலத்தை கிண்ணியா தள வைத்தியசாலையில் இருந்து பிரேத பரிசோதனைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இந்நிலையில் குறித்த சிறுவனின் உடற்பாகங்கள் பாதிக்கப்பட்ட நிலையில் வலது காலில் தொடைப்பகுதியில் பாம்பு கடித்து உள்ளதாகவும் இதேவேளை மூச்சுத்திணறல் ஏற்பட்ட நிலையில் அவர் உயிரிழந்துள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ஐ)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## சார்ளி சப்ளின்

ஒருத்தர் உயிரோடு இருக்கின்ற பொழுது அவரைக் கடத்திக் கொண்டு போவது ஒருவருடைய வழக்கம். அவரைக் கொண்டு போய் எங்கேயாவது மறைத்து வைத்துக் கொண்டு சொந்தக்காரர்களை மிரட்டி பணம் கேட்பார்.

ஆனால் ஒருத்தர் செத்துப் போனதற்கு பின்பும் அவரை கடத்திக் கொண்டு போய் மறைத்து வைத்துக் கொண்டு பணம் கொடுத்தால் தான் உடம்பை திருப்பிக் கொடுப்பேன் என்று எங்கேயாவது கேட்பது உண்டா?

1978 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 2 ஆம் திகதி உலகத்திலே உள்ள முக்கியமான பத்திரிகைகள் எல்லாம் முதல் பக்கத்திலே ஒரு முக்கியமான செய்தியை வெளியிட்டிருந்தது.

அதைப் படித்துவிட்டு எல்லோரும் திகைத்துப் போய் விட்டார்கள். அது என்ன செய்தி தெரியுமா? உலகத்தின் தலைசிறந்த நகைச்சுவை மன்னர் சார்ளி சப்ளின் உடல், அது புதைக்கப்பட்டிருந்த இடத்திலேயிருந்து காணாமல் போய்விட்டது என்கின்றது தான் அந்தச் செய்தி.

1977 கடையிலே அவர் இறந்து போனார். ஒரு சில மாதங்களில் அவர் உடல் புதைக்கப்பட்ட இடத்திலேயிருந்து காணாமல் போய்விட்டது. உலகம் பூராகவும் பரபரப்பு.

அவர் உடலை யார் கடத்திக் கொண்டு போயிருப்பார்கள்? யாருக்கும் ஒன்றும் புரியவில்லை. சார்ளி சப்ளின் தான் இறந்த பிறகு தன்னுடைய உடல் தன் தாய்நாடான இங்கிலாந்திலே தான் புதைக்கப்பட வேண்டும் என்று ஆசைப் பட்டார்.

ஒருவேளை அவருடைய ரசிகர்களுக்குப் பிடிக்காமல் போயிருக்கலாம். அதனால் அப்படிப்பட்டவர்கள் யாராவது கடத்திக் கொண்டு போயிருப்பார்களோ? இது ஒரு சந்தேகம்.

ஒரு வேளை சார்ளி சப்ளினின் தீவிரமான ரசிகர்கள் அவரை விட்டுப் பிரிய மனம் இல்லாமல்...தங்கள் கூடவே வைத்துக் கொள்ள வேண்டும் என்று எடுத்துக் கொண்டு போயிருப்பார்களோ? இப்படி ஒரு சந்தேகம்.

இதற்கெல்லாம் 1978 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆம் திகதி விடை கிடைத்தது. இது சம்பந்தமாக இரண்டு பேரை பொலிஸார் கைது செய்தனர். கானெவ் என்று ஒருத்தர். வார்தாஸ் என்ற இன்னொருத்தர். இவர்கள் இரண்டு பேரும் கிழக்கு ஐரோப்பாவைச் சேர்ந்தவர்கள்.

எதற்காக அந்த உடலை கடத்தினார்கள் என்று விசாரித்தால் அது வெறும் பணத்திற்காகத்தான் என்று தெரிய வந்தது.

சார்ளி சப்ளின் உடலைக் கடத்திக் கொண்டு போய் வைத்துக் கொண்டு...நிறையப் பணம் கொடுத்தால் தான் திருப்பிக் கொடுப்போம் என்று அவருடைய சொந்தக்காரர்களை மிரட்டியிருக்கின்றார்கள்.

சொந்தக்காரர்கள் எல்லாம் இதற்கு என்ன செய்வது என்று ஒரு முடிவுக்கு வருவதற்குள்ளே பொலிஸ் அவர்களைக் கைது செய்து விட்டது. கிட்டத்தட்ட ஒரு 15 மைலுக்கு அப்பாலே இருந்து அவருடைய உடம்பு மீட்கப்பட்டது.

மறுபடியும் பழைய இடத்திலேயே புதைத்தார்கள். சுவிட்சர்லாந்திலே...ஜெனிவா ஏரியின் பக்கத்திலே உள்ள ஒரு இடுகாட்டிலே..1978, மே மாதம் 23 ஆம் திகதி சார்ளி சப்ளின் இரண்டாவது தடவையாக புதைக்கப்பட்டார்.

இது மாதிரி செத்ததற்குப் பின்பும் பெறுமதி குறையாமல் இருக்கிறவர்களும் இந்த உலகத்திலே உண்டு. உயிரோடு இருக்கின்ற பொழுது பெறுமதி இல்லாமல் இருக்கின்றவர்களும் சில பேர் உண்டு.

எங்கள் ஆள் ஒருத்தரை திடீர் என்று ஒரு நாள் சில பேர் கடத்திக் கொண்டு போய் வைத்துக் கொண்டு அவருடைய மனைவிக்கு போன் செய்தார்கள்.

10 ஆயிரம் ரூபா கொண்டு வந்து கொடுத்துவிட்டு உங்கள் வீட்டுக்காரரை அழைத்துக் கொண்டு போங்கள் என்றார்கள்.

நான் 20 ஆயிரம் ரூபா உங்களுக்குத் தருகின்றேன் அவரை வெளியிலே விடாதீர்கள். நீங்களே வைத்துக் கொள்ளுங்கள் என்றார் அந்த அம்மா..

# புரட்டிப் போட்ட புரேவி புயலின் பதிவுகள்




படங்கள்:தவசீலன், சதீஸ், வசந்தரூபன், தேவாணந்தன், கருணாகரன், யோசப்நயன்












நல்லூர்


















ஈச்சமோட்டை



கரணவாய்








வல்வெட்டித்துறை

வடமராட்சி





யாழ்ப்பாணம்


நாவாந்துறை





ஆனைக்கோட்டை















கொக்குவில்

படங்கள்:- சிவசாந்தன், மகாலிங்கம், கணேசலிங்கம், சுபேசன், ரவிசாந்




















வாதரவத்தை



சாவகச்சேரி



குப்பிழான்











புன்னாலைக்கட்டுவன்

# கொரோனா தடுப்பூசிகளை சர்வதேச கிரிமினல் கும்பல்கள் இலக்கு வைக்கலாம் என எச்சரிக்கை

(பாரிஸ்)

கட்டமைக்கப்பட்ட சர்வதேச கிரிமினல் கும்பல்கள் கொரோனாத் தடுப்பூசிகளை இலக்கு வைத்து குற்றச் செயல்களில் ஈடுபடலாம் என சர்வதேச பொலிஸ் ஒருங்கிணைப்பு அமைப்பான இண்டர்போல் எச்சரித்துள்ளது.




அத்துடன், இத்தகைய குழுக்களால் சந்தையில் போலி மருந்துகள் விற்பனைக்கு அறிமுகம் செய்யப்படலாம் எனவும் இண்டர்போல் தெரிவித்துள்ளது.


பிரான்ஸை தலைமையிடமாகக் கொண்ட இண்டர்போல் தனது 194 உறுப்பு நாடுகளின் சட்ட அமுலாக்க பிரிவினருக்கு இது குறித்து எச்சரித்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் தடுப்பூசிகள் உலகம் முழுவதும் சந்தைக்கு வரத் தயாராக உள்ள நிலையில் விநியோகச் சங்கிலிகளை சீர்குலைக்கவும் கிரிமினல் கும்பல்கள் திட்டமிடலாம் எனவும் அந்த எச்சரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போலி வலைத்தளங்கள் கொரோனா தடுப்பு மருந்துகள் தேவைப்படுவோரை இந்தக் கும்பல்கள் இலக்குவைக்கலாம். போலி மருந்துகளைச் சந்தைக்கு விடுவதன் மூலம் உயிருக்கு கூட இந்தக் கும்பல்கள் ஆபத்தை எனவும் இண்டர்போல் பொதுச் செயலாளர் ஜூர்கன் ஸ்டாக் கூறினார். (நி)

# ஆழ்துளைக் கிணற்றில் விழுந்த சிறுவன்

## மீட்புப் பணிகள் தீவிரம்



(டில்லி)

உத்தரபிரதேச மாநிலத்தில் நான்கு வயதுச் சிறுவன், ஆழ்துளைக் கிணற்றில் விழுந்த நிலையில் சிறுவனை மீட்கும் பணிகள் தீவிரமாக நடை பெற்று வருகின்றன.

மஹோபா மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயி பஹிரத் குஷ்வாஹா தம்பதிகளின் கணேந்திரா என்ற மகனே இவ்வாறு ஆழ்துளைக் கிணற்றில் விழுந்துள்ளார்.

கோதுமை வயலுக்கு நேற்று முன்தினம் புதன்கிழமை குடும்பமாகச் சென்றிருந்த நிலையில், சிறுவன் விளையாடிக் கொண்டிருந்த போதே இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இந்நிலையில், பொலிஸார் மற்றும் மீட்புப் படையினர் சிறுவனை மீட்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

குறித்த ஆழ்துளைக் கிணறு 60 அடி ஆழம் கொண்டது எனவும், குழந்தை 30 அடி ஆழத்தில் உள்ளதாகவும் மீட்புப் படையினர் தெரிவித்துள்ளனர்.

மீட்புப் பணி தொடர்ந்து நடைபெற்றுவரும் நிலையில் சிறுவன் சுவாசிப்பதற்கு ஏது வாக ஒட்சிசன் வசதி ஏற்படுத்தப் பட்டுள்ளது.

தற்போதுவரை சிறுவன் நலமுடன் இருப்பதாக பொலிஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# கொரோனாவை தடுப்பதற்கு ஒற்றை டோஸ் தடுப்பூசி

(லண்டன்)

பெல்ஜியம் நாட்டின் கே.யு.லுவனில் உள்ள ரெகா நிறுவனத்தில் கொரோனாவுக்கு ஒற்றை 'டோஸ்' தடுப்பூசி ஒன்றை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

கொரோனாவை தடுப்பதற்காக இப்போது உருவாக்கி, மனிதர்களுக்கு செலுத்தி பரிசோதிக்கப்படுகிற தடுப்பூசிகள் பலவும் இரட்டை 'டோஸ்' தடுப்பூசிகள் ஆகும். அதாவது இந்த தடுப்பூசியை ஒருமுறை போட்டு பின்னர் குறிப்பிட்ட கால இடைவெளிக்கு பின்னர் மறு முறையும் போட வேண்டும். இதனால் ஒருவர் 2 முறை தடுப்பூசி போட நேரிடும்.


இந்த நிலையில் பெல்ஜியம் நாட்டின் கே.யு.லுவனில் உள்ள ரெகா நிறுவனத்தில் மஞ்சள் காய்ச்சல் தடுப்பூசியின் அடிப்படையில் கொரோனாவுக்கு ஒற்றை 'டோஸ்' தடுப்பூசி ஒன்றை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

கொரோனா வைரஸின் மேற்பரப்பில் உள்ள 'ஸ்பைக் புரோட்டின்' மரபணு வரிசையை மஞ்சள்காய்ச்சல் தடுப்பூசியில் செலுத்தி, இந்த தடுப்பூசியை விஞ்ஞானிகள் உருவாக்கி உள்ளனர். இந்த தடுப்பூசிக்கு 'ரெகாவேக்ஸ்' என்று பெயரிடப்பட்டுள்ளது.

இந்தத் தடுப்பூசியின் ஒரு 'டோஸ்' அளவை வெள்ளெலிகள் மற்றும் குரங்குகளுக்கு செலுத்தி சோதித்ததில் அது கொரோனா வைரஸில் இருந்து பாதுகாப்பது தெரிய வந்துள்ளது.

அடுத்த கட்டமாக இந்த தடுப்பூசியின் மருத்துவ பரிசோதனைக்கு விஞ்ஞானிகள் தயாராகி வருகிறார்கள் என தகவல் வெளியாகி உள்ளது. (நி)

# புரட்டிப் போட்ட புரேவியின் பதிவுகள்.....






மன்னார்











திருகோணமலை

# இலங்கைப் பாராளுமன்றம் எவ்வாறு தொழிற்படுகின்றது?

11

**கலாநிதி க.தவலிங்கம்**
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



'நிதி, கணக்குகள்' மற்றும் 'வழங்கல்கள், சேவைகள்' ஆகிய அலுவலகங்கள் இரண்டு உதவிப் பணிப்பாளர்களின் தலைமையில் இருக்கின்ற அதேவேளை, 'உணவு வழங்கல் - கணக்குகள்' அலுவலகம் ஒரு கணக்காளரின் தலைமையில் உள்ளது.

பணிப்பாளரின் (நிதி) ஆளுகையின் கீழ் வரும் பிரதான பணிகளாவன: கணக்கீட்டு அலுவலர் என்ற வகையில் தமது பொதுவான பொறுப்புக்களை நிறைவேற்றுதல் மற்றும் அரசாங்க நிதிப் பிரமாணங்கள், சட்டவாக்கங்கள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் ஆகியவற்றுக்கு ஏற்றவாறு நிதிகள் முகாமைத்துவம் செய்யப்படுவதை உறுதிப்படுத்துவதற்கான கணக்குத் தணிக்கைத் தொழிற்பாடுகளை வழங்குதல் என்பனவாகும்.

### இதன் உள்ளடக்கம்

(அ) தமது வரவு-செலவுத் திட்டம் தயாரித்தல், நிதிசார் பகுப்பாய்வை மேற்கொள்ளுதல் மற்றும் நிதிசார் கண்காணிப்பு, நிதிசார் அறிக்கைகளைத் தயாரித்தல், பயனுறுதியான கணக்கீட்டு முறையொன்றைத் தயாரித்து நடைமுறைப்படுத்துதல், சம்பளப் பதிவேட்டு முறையை முகாமைத்துவம் செய்தல் மற்றும் செம்மையான உள்ளக நிதிசார் கட்டுப்பாட்டைப் பேணுதல் என்பனவாகும்.

(ஆ) நிதி மற்றும் வழங்கல் திணைக்களத்தின் சகல செயற்பாடுகளையும் நிறைவேற்றுவதற்கு மனித வளங்கள் வினைத்திறன் மிக்க முறையில் பயன்படுத்தப்படுகிறது என்பதை உறுதி செய்து கொள்வதற்காக, மூன்று பிரிவுகளையும் சேர்ந்த பணியாள் தொகுதியினருக்கு தலைமைத்துவம் மற்றும் நெறிப்படுத்தல் ஆகியவற்றை வழங்கல்.

### சட்டவாக்க சேவைகள் திணைக்களம்

சட்டமியற்றுதல், மேற்பார்வை மற்றும் பொது நிதி ஆகிய துறைகளில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தொழில்சார் சேவைகளை வழங்குகின்றது. பின்வரும் பிரிவுகள் சட்டவாக்க சேவைகள் திணைக்களத்தின் கீழ் செயற்படுகின்றன:

- சபை ஆவண அலுவலகம் (Table Office)
- சட்டமூல அலுவலகம் (Bills Office)
- குழு அலுவலகம் (Committee office)
- ஆலோசனைக் குழு அலுவலகம் (Consultative office)
- அரசாங்கக் கணக்குகள் குழு (PAC) மற்றும் அராசாங்க பொறுப்பு முயற்சிகள் குழு (COPE) அலுவலகம்
- உரைபெயர்ப்பாளர் அலுவலகம் (interpreters' office)
- நூலகம்

### சபை ஆவண அலுவலகம் (Table Office)

அறிமுகம்

இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 18வது உறுப்புரை மற்றும் இலங்கை பாராளுமன்ற நிலையியற் கட்டளை 13 இல் குறித்துக்காட்டப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம், பாராளுமன்ற அலுவல்களை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் நடத்துவது இலங்கை சட்டமன்ற சபை ஆவண அலுவலகத்தின் பிரத்தியேக பொறுப்பாக உள்ளது.

> **இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 18 ஆவது உறுப்புரை மற்றும் இலங்கை பாராளுமன்ற நிலையியற் கட்டளை 13 இல் குறித்துக்காட்டப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம், பாராளுமன்ற அலுவல்களை- சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் நடத்துவது இலங்கை சட்டமன்ற சபை ஆவண அலுவலகத்தின் (Table Office) பிரத்தியேக பொறுப்பாக உள்ளது.**

### சபை ஆவண அலுவலகத்தின் வேறுபட்ட அலகுகள்


பாராளுமன்ற சபைக் கூட்ட நடைமுறைகளின் சீரான தொழிற்பாட்டுக்காக சபை அலுவலகம் பின்வரும் நான்கு தனியான பிரிவுகள் உள்ளன:-

(அ) பாராளுமன்ற வினாக்கள் பிரிவு

(ஆ) ஒழுங்குப் புத்தகம் அனுபந்தம், ஒழுங்குப் பத்திரம் மற்றும் பாராளுமன்ற கூட்ட அறிக்கைகள் பிரிவு

(இ) அலுவல்களின் ஒழுங்கு, பாராளுமன்றத்தில் பத்திரங்களை சமர்ப்பித்தல், தனியார் உறுப்பினர் பிரேரணைகள், திகதியிடப்படாத பிரேரணைகள் போன்ற பிரிவுகள்

(ஈ) பாராளுமன்ற அலுவல்கள் குழு மற்றும் விசேட கடமைகள் பிரிவு




### பாராளுமன்ற வெளியீடுகளைத் தயாரித்தல்

பாராளுமன்ற சபை கூட்ட நடைமுறைகளை நடத்துவதற்கு முக்கிய தேவைப்பாடுகளாக உள்ள பின்வரும் பாராளுமன்ற வெளியீடுகளை தயாரிப்பது சபை ஆவண அலுவலகத்தின் பிரத்தியேக பொறுப்பாக உள்ளது.

- பாராளுமன்ற ஒழுங்குப் புத்தகம்
- பாராளுமன்ற ஒழுங்குப் புத்தகத்திற்கான அனுபந்தம்
- பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரம்
- பாராளுமன்றத்தில் பத்திரங்கள் சமர்ப்பித்தல்
- பாராளுமன்ற அலுவல்களின் ஒழுங்கு
- பாராளுமன்ற கூட்ட அறிக்கைகள்

### பாராளுமன்ற ஒழுங்குப் புத்தகம்

வாய்மூல விடைக்காக மற்றும் எழுத்திலான விடைக்காக பாராளுமன்ற உறுப்பினர்களிடம் இருந்து, பாராளுமன்ற செயலாளர் நாயகத்தால், பெற்றுக் கொள்ளப்படும் எல்லாக் கேள்விகளும், அறிவித்தல் கொடுக்கப்பட்ட தினத்தில் இருந்து, ஏழு நாட்களுக்கு மேற்படாத ஒரு தினத்தில், பதிலளிப்பதற்காக ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட வேண்டும். ஒழுங்குப் புத்தகத்தின் முன்பக்கம் உரு-2 காட்டுகிறது.

ஒழுங்குப் புத்தகமானது மூன்று அல்லது நான்கு மாதங்களுக்கு ஒரு தடவை வெளியிடப்படுகின்றது. ஒழுங்குப் புத்தகத்தினை எப்போது வெளியிட வேண்டும் எனத் தீர்மானிப்பது சபை ஆவண அலுவலக தலைவரின் பிரதான பொறுப்பாகும்.

> **ஒழுங்குப் புத்தகமானது மூன்று அல்லது நான்கு மாதங்களுக்கு ஒரு தடவை வெளியிடப்படுகின்றது.**

### பாராளுமன்ற ஒழுங்குப் புத்தகத்திற்கான அனுபந்தம்

எதிர்காலத்திகதிகளுக்கான பாராளுமன்ற வினாக்களின் ஏதாவது அறிவித்தல் மற்றும் எதிர்காலத் திகதிகள் குறிக்கப்படாத அல்லது இல்லாத பிரேரணை ஆகியவற்றைக் கொண்ட அனுபந்தம் ஒழுங்குப் புத்தகத்தின் குறைநிரப்பியாக ஒவ்வொரு அமர்வு வாரத்தினதும் முடிவின் போது வெளியிடப்படும்.

உரு-2



(முன்பதாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 1.]

**பாராளுமன்றம்**
**ஒழுங்குப் புத்தகம்**

**2020 செப்டம்பர் 08, செவ்வாய்க்கிழமை உட்பட அன்றைய தினத்திலிருந்து**
**2020 ஆகஸ்ட் 21, வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது**

**2020 செப்டம்பர் 08, செவ்வாய்க்கிழமை**

**பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்**

> **வாய்மூல விடைக்காக மற்றும் எழுத்திலான விடைக்காக பாராளுமன்ற உறுப்பினர்களிடம் இருந்து, பாராளுமன்ற செயலாளர் நாயகத்தால், பெற்றுக் கொள்ளப்படும் எல்லாக் கேள்விகளும், அறிவித்தல் கொடுக்கப்பட்ட தினத்தில் இருந்து, ஏழு நாட்களுக்கு மேற்படாத ஒரு தினத்தில், பதிலளிப்பதற்காக ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட வேண்டும்.**

திகதிகள் குறிக்கப்படாத பிரேரணைகளும் (நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் மற்றும் நம்பிக்கைப் பிரேரணைகள், குற்றப் பிரேரணைகள், பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் நியமனங்கள், போன்றவை) தனியார் உறுப்பினர் ஒழுங்குப் புத்தகத்தில் வெளியிடப்படல் வேண்டும்.

இதனைத் தொடர்ந்து பாராளுமன்ற ஒழுங்குப் புத்தகம் அச்சிடப்பட்ட உடனேயே விரைவுத் தபால் மூலமாக அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், அமைச்சர்களின் செயலாளர்கள் மற்றும் உள்ளிட்ட ஏனைய சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகின்றது.

மும்மொழிகளிலான பாராளுமன்ற ஒழுங்குப் புத்தகத்தின் இறுதி மென்பிரதி அல்லது அனுபந்தம் அதனைத் தொடர்ந்து அச்சுக்கு அனுப்பப்படும் அதேவேளை பாராளுமன்ற இணையத் தளத்தில் வெளியிடப்படுவதற்காக சபை ஆவண அலுவகத் தலைவரால் பணிப்பாளருக்கு (தகவல் முறைமை முகாமைத்துவம்) அனுப்பி வைக்கப்படுகின்றது.

> **எதிர்காலத் திகதிகளுக்கான பாராளுமன்ற வினாக்களின் ஏதாவது அறிவித்தல் மற்றும் எதிர்காலத் திகதிகள் குறிக்கப்படாத அல்லது இல்லாத பிரேரணை ஆகியவற்றைக் கொண்ட அனுபந்தம் ஒழுங்குப் புத்தகத்தின் குறைநிரப்பியாக ஒவ்வொரு அமர்வு வாரத்தினதும் முடிவின் போது வெளியிடப்படும்.**

(தொடரும்...)

# உயர்தரப் பெறுபேறு மார்ச்சில்




(கொழும்பு)

நாட்டின் தற்போதைய நிலவரத்தை கருத்திற் கொண்டு கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளை அடுத்த வருடம் மார்ச் மாதம் வெளியிட திட்டமிட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் சனத் பூஜித தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போது அவர் இதனைத் தெரிவித்தார். (ஐ)

# ஆலய வழிபாடு

## ஏன் – எதற்கு – எப்படி



## அபிஷேகம் தரும் ஆற்றல்

(தொடர்ச்சி)

நம் முன்னோர்கள் இதை எப்படித்தான் கண்டுபிடித்தார்களோ...தெரியவில்லை. ஆனால் விஞ்ஞானிகள் இந்த உண்மையை அண்மையில்தான் கண்டுபிடித்து ஒப்புக் கொண்டுள்ளனர். மூலவர் சிலைகளில் இருந்து வெளிப்படும் ஆற்றல் பக்தர்களிடம் பாதிப்பை ஏற்படுத்தி விடக் கூடாது என்ற எண்ணத்தில் பெரும்பாலான ஆலயங்களில் பெயரளவுக்கு சில அபிஷேகங்களை மட்டுமே பக்தர்கள் பார்க்க செய்வார்கள்.

நமது பழைமையான ஆலயங்களில் உள்ள மூலவர் சிலைகள் அரிய மூலிகைகளால் உருவாக்கப்பட்டதாகும். அவற்றின் அடியில் சக்திவாய்ந்த மந்திர தகடு பதித்து இருப்பதை நீங்கள் அறிவீர்கள். இந்த மந்திர தகடும் மூலிகையும் அபிஷேகம் செய்யும் போது அதிக ஆற்றலை வெளிப்படுத்தும்.

அபிஷேக தீர்த்தத்தை நம் மீது தெளித்துக் கொண்டாலும் சிறிதளவு குடித்தாலும் நமக்கு அபரிமிதமான புத்துணர்ச்சி கிடைப்பது இதனால்தான்.

தயிர், பால், சந்தனம், தண்ணீர் ஆகியவற்றால் அபிஷேகம் செய்யும்போது மூலவர் சிலையில் அதிக அளவில் மின் கடத்தும் திறன் ஏற்படுவதை குற்றாலம் பராசக்தி கல்லூரி ஆராய்ச்சிக் குழுவினர் சில ஆண்டுகளுக்கு முன்பு கண்டுபிடித்தனர். அபிஷேகம் செய்ய செய்ய கருவறையில் உள்ள காற்று மண்டலத்தில் எதிர் மின்னூட்டங்கள் அதிகரிப்பதையும் கண்டுபிடித்தனர்.

அபிஷேகம் காரணமாக கருவறையில் உள்ள காற்றில் அதிக ஈரப்பதம் இருக்கும். ஈரப்பதத்தில் ஒளி வேகம் அதிகமாக இருக்கும்.

அதனால்தான் அபிஷேகத்தின் போதும் தீபம் காட்டும்போதும் கருவறைக் காற்று மண்டலம் அயனியாக்கப்பட்ட மூலக்கூறுகளுடன் வெளியில் வருகிறது. அது பக்தர்களுக்கு உள்ளத்தில் பலத்தை ஏற்படுத்துவதாக விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

மேலும் அபிஷேகத்தின்போது ஓம் என்று தொடங்கி குருக்கள் சொல்லும் மந்திரம் கற்சிலை மீது பட்டு வெளியில் அலையாக வரும்போது தெய்வீக ஆற்றலைக் கொடுக்கிறது.

அபிஷேகம் செய்யப்படும்போது நேர் அயனியும் எதிர் அயனியும் காற்றில் வந்து பக்தர்கள் உடலுக்குள் சென்று புத்துணர்ச்சியை ஏற்படுத்துகிறது.

நேர் அயனியை சிவமாகவும் எதிர் அயனியை சக்தியாகவும் நம் முன்னோர்கள் உருவக்கப்படுத்தி அபிஷேகம் செய்யும்போது சிவசக்தியின் திருவிளையாடல் நடப்பதாக வரையறுத்துள்ளனர்.

இதைக் கருத்தில் கொண்டே ஆலயத்தில் எப்போதும் தெய்வீக ஆற்றல் நிரம்பி இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் நம் முன்னோர்கள் கருவறையில் இருந்து அபிஷேகத் திரவியங்கள் நேராக கோவில் திருக்குளத்தைச் சென்றடைய ஏற்பாடு செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒவ்வொரு மூலமூர்த்திக்கும் ஒவ்வொருவித அபிஷேகம் மிகவும் உகந்தது. அதற்கு ஏற்ப பலன்கள் கிடைக்கும்.

பொதுவாக பாலாபிஷேகம் செய்வதைப் பெரும்பாலான பக்தர்கள் விரும்பி செய்வதுண்டு. எல்லாக் கடவுளுக்கும் பாலாபிஷேகம் அடிக்கடி நடைபெறும். குறிப்பாக பிரதோஷ காலத்தில் நந்திக்குச் செய்யப்படும் பல்வேறு அபிஷேகங்களில் பால் அபிஷேகம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. அபிஷேகத்துக்குக் கொண்டு செல்லும் பாலை கோவிலை ஒரு தடவை சுற்றி விட்டு கொடுத்தால் இரட்டிப்பு பலன் கிடைக்கும் என்று சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ளது.

இப்படி என்னென்ன பொருட்களால் எப்போது எந்த தெய்வத்துக்கு அபிஷேகம் செய்தால் என்னென்ன நன்மைகள் பெறலாம் என்பதை அடுத்து பார்க்கலாம். (முற்றும்)

# செய்தித்துளிகள்

## 333 பேர் நாட்டிற்கு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் அச்சம் கார்ணமாக மத்திய கிழக்கில் சிக்கித் தவித்த மேலும் 333 இலங்கையர்கள் நாட்டை வந்தடைந்துள்ளனர். அவர்கள் அனைவரும் நேற்று வியாழக் கிழமை காலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர். அதன்படி கட்டாரிலிருந்து 49 பேரும் ஜோர்தானிலிருந்து 284 பேரும் நேற்று நாடு திரும்பியுள்ளனர்.

நாட்டை வந்தடைந்த அனைவரும் விமான நிலையத்தில் வைத்து பி.சி.ஆர்.பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுடன், தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காகவும் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். (ஐ)

## 80 இலட்சம் பெறுமதியான போதைப் பொருட்கள் மீட்பு

(கொழும்பு)



கொழும்பு மத்திய அஞ்சல் அலுவலகத்தின் ஊடாக பரிமாற்றம் செய்யப்பட்ட சுமார் 80 இலட்சம் பெறுமதியான போதைப்பொருட்கள் அதிகாரிகளால் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த போதைப்பொருட்கள் 4 பொதிகளில் பொதி செய்யப்பட்டு அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. (நி-7)

## தப்பிச்சென்ற சிறைக்கைதி கண்டுபிடிக்கப்பட்டார்

(கொழும்பு)

ராகம வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் தப்பிச்சென்ற மஹர சிறைச்சாலை கைதி கண்டுபிடிக்கப்பட்டுள்ளார். குறித்த நபர் ஒருகொடவத்தை பகுதியில் வைத்து அடையாளம் காணப்பட்டுள்ளார். (நி-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 240 |
| உருளைக்கிழங்கு | 160 | 160 |
| பச்சைமிளகாய் | 300 | 400 |
| தக்காளி | 80 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 80 |
| கோவா | 80 | 80 |
| கரட் | 100 | 240 |
| பூசணி | 50 | 100 |
| புடோல் | 80 | 160 |
| வாழைக்காய் | 40 | 100 |
| சின்ன வெங்காயம் | 250 | 400 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 |
| பாகற்காய் | 300 | 400 |
| வெண்டிக்காய் | 100 | 180 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 |
| பயற்றங்காய் | 300 | 300 |
| லீக்ஸ் | 120 | 100 |
| பீற்றூட் | 80 | 100 |
| கறிமிளகாய் | 400 | 300 |
| முருங்கைக்காய் | 200 | 300 |
| போஞ்சி | 200 | 240 |
| கத்தரிதம்புள்ள | 80 | 240 |
| கீரை - 1 பிடி | 40 | 80 |
| தேசிக்காய் | 200 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70-90 |
| இராசவள்ளி | --- | 250 |
| வெங்காயப்பூ | 300 | — |
| முள்ளங்கி | 80 | 120 |
| பொன்னாங்காணி | 30 | 40 |
| வல்லாரை | 40 | 30 |
| ஈரப்பலா | 100 | 100 |



# சிறுவர் அரங்கம்

## பால்கன் பறவை

முல்லாவுக்கு ஒரு பால் கன் பறவை கிடைத்தது. அது புறாவைப் போல இருக் கும். முல்லா இதற்கு முன் இப்பறவையைப் பார்த்ததி ல்லை.

அவருக்கு இப்பறவை யின் அகண்ட தாடையும், வளைந்த அலகும் அதிக அளவில் இருக்கும் சிறகும் ரசிக்கத் தக்கதாக இல்லை.

"என்ன இருந்தாலும் புறாவின் அழகு வருமா? ஏ பறவையே, உன்னையும் புறா போல அழகாக ஆக்கு கிறேன்" என்று கூறிக் கொண்டே, அதிகமாக வுள்ள இறகுகளைப் பிய்த் தெடுத்தார்.

வளைந்த அலகை ஒரு சிறு உளி கொண்டு செதுக்கி வளைவைக் குறைத்தார்.

ஒரு கத்திரியை எடுத்து அதன் அகண்ட தாடையின் அளவைக் குறைக்க முய ன்றார்.

பின் திருப்தியாக, "இப் போதுதான் நீ புறா போல அழகாக இருக்கிறாய்" என்றார்.

மனிதர்கள் அனை வரும் இப்படித்தான் இருக் கிறோம்.

நம்மிடம் இருந்து யாரேனும் ஏதாவது விட யத்தில் மாறுபட்டு இருந் தால், அது சரியா, தவறா என்று பார்க்காமல் நம்மு டைய கருத்துக்கு ஏற் றார் போல அவர்களையும் மாற்ற முயற்சி செய்கி றோம்.

பால்கன் பறவையின் அழகை ரசிக்கத்தவறிய முல்லா போல, நாமும் மற்றவர்களிடம் உள்ள நல்ல விடயங்களை ரசிக்கத் தவறி விடுகிறோம்.

நம்மிடமிருந்து வித்தியா சமாக இருந்தால் அதை ஒரு தவறாகவே கருதுகி றோம். அதை நம்மால் பொறுத்துக்கொள்ள முடிவ தில்லை.

நம் வழிக்கு அனைவ ரும் வரவேண்டும் என எதிர்பார்க்கிறோம். இத னால் தான் பிரச்சினை களே!.



# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## மாண்புமிகு மாசிடோனியா

44

எந்தளவுக்கு வாழ்க் கையில் ஒவ்வொரு படி யிலும் நேர்த்தியைக் கடைப்பிடித்தார்களோ அதேயளவுக்கு மூட நம்பிக்கையிலும் திளை த்திருந்தார்கள் கிரேக் கர்கள்.

தும்மல், பூனை, பல்லி விழும் பலன் என்று பட்டியல் ஏரா ளம். இனி மாசிடோ னியாவுக்கு வருவோம்.

கிரீஸ் நாட்டின் வட பகுதிக்கு இன்னொரு பெயர்தான் மாசிடோ னியா. இங்கு வசித்த வர்களும் கிரேக்கர்கள் தான்.

ஆனால் மற்ற கிரேக் கப் பகுதிகளில் வசிப்ப வர்களைப் போல அல் லாமல் நாகரிகம் குறை ந்தவர்களாக இருந்த னர்.

பேசுகின்ற மொழி நளினமாக இல்லாமல் கொச்சையாக இருக் கும். இதனால் வடக்க



கிரேக்கர்களின் பாரம்பரிய உடை

த்தியர்கள் என்று ஏளன மாகவே பார்ப்பார்கள் மற்ற கிரேக்கர்கள்.

ஆனாலும் கூட பல மன்னர்கள் மாசிடோனி யாவை ஆண்டு கொண் டிருந்தனர். ஆனால் நாக ரிக ரீதியாக மாசிடோ னியாவை மற்ற கிரேக் கர்களுக்கு இணையாக மாற்றும் திருப்பணி யைச் செய்வதற்கு எந்த மன்னருமே தயாராக இல்லை.

அப்போதுதான் பிலிப் என்கிற இளைஞனுக்கு மாசிடோனியாவின் முன் னேற்றத்தின் மீது நாட் டம் வந்தது.

எப்படி முன்னேற்று வது இந்தப் பாழாய்ப் போன மாசிடோனி யாவை. எல்லோருமே அவரவர் வேலையைத் தான் பார்க்கிறார்கள்.

நான் என் மனைவி, என் குழந்தை என்று. நாட்டை யார்தான் காப்பாற்றுவது? யாரா வது உதவிக்கு வாருங் கள். நம்முடைய நாட் டைக் கலாசார ரீதியாக, நாகரிக ரீதியாக மற்ற கிரேக்கர்களுக்கு இணை யாக மாற்றுகிறேன்.

உரக்கக் குரல் கொடு த்தான் பிலிப். தொண் டைத் தண்ணீர் வற்றும் வரை கத்தினான். அவ னது குரல் எல்லோரின் காதிலும் விழுந்தது. ஆனால் இவன் பக்கம் திரும்பக்கூட யாரும் தயாராக இல்லை.

சோர்ந்துவிடவில்லை பிலிப். யாரும் வரா விட்டால் நானும் ஒதுங் கிவிட வேண்டுமா என்ன? மாட்டேன். நிச் சயமாக மாட்டேன்.

என்னுடைய திறமை களை வளர்த்துக் கொள்ளப் போகி றேன். என்னுடைய கல்வியறிவை உயர்த் திக் கொள்ளப் போகி றேன்.

அதற்காக இதோ இந்த நிமிடமே தீபு (தீப்ஸ்) நகருக்குப் புற ப்படுகிறேன். சொல்லி விட்டுப் புறப்பட்டான் பிலிப். அப்போது அவ னுக்கு வயது பதினை ந்து. (தொடரும்)

சரியாகத் திட்டமிட்டால் முதல் முயற்சியிலேயே பாதித் தூரத்தை நிச்சயம் அடைந்து விடலாம்.
– என்.ஹில்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## திட்டமிடல் இல்லாத அபிவிருத்தி அனர்த்தமேயன்றி வேறில்லை!

புரேவி சூறாவளி வடக்கு, கிழக்கு மாகாணங்களை துவம்சம் செய்து நகர்ந்துள்ளது.

மழையும் புயலுமாக ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தால் பாரிய சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

இதற்கு மேலாக, நெற்பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கிக் கிடப்பது கண்டு விவசாயிகள் தலையில் கைவைத்து கண்ணீர் விடுகின்றனர்.

ஆர்வத்தோடு நெற்செய்கையில் ஈடுபட்ட நிலையில், ஆரம்பத்தில் மழை இல்லாமல் பயிர்கள் கருகிப் போக, எஞ்சிய பயிர்களாவது விட்ட முதலீட்டை மீட்டுத் தரும் என்ற நம்பிக்கையில் இருந்தவேளை, சூறாவளியுடன் கூடிய மழை கொட்டித்தள்ளி நெற்பயிர் கொண்ட வயல்களை வெள்ளக்காடாக்கியுள்ளது.

இதுமட்டுமன்றி, சில இடங்களில் கடல்நீர் உட்புகுந்த அனர்த்தமும் நடந்தாயிற்று.

இவ்வாறு வடக்குக் கிழக்கில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் ஏற்படுத்திய இழப்புகளுக்கு உரிய நிவாரணங்களை வழங்குவது அவசியமாகும்.

இதற்கு மேலாக, மழை வெள்ளத்தை சேமித்தல் என்ற விடயத்திலும் நாம் பின்னடைவில் இருக்கின்றோம் என்பதை இங்கு ஏற்றுத்தானாக வேண்டும்.

ஆம், வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் பெருங் குளங்கள் இன்மையால் மழை வெள்ளம் வீணே கடலுக்குச் சென்று போகிறது.

மழை வெள்ளம் ஏற்பட்டதும் வெள்ளத் தடுப்பு அணைகளைத் திறந்து மழை நீரை கடலுக்கு விடுகின்ற காரியத்தைத் தவிர நாம் வேறு என்னதான் செய்தோம்.

இதுதான் என்றால் இல்லை, ஊர்களில் இருக்கின்ற குளங்களைச் செம்மைப்படுத்தாமல் கைவிட்டதனாலும் குளங்களைத் தொடுக்கின்ற வாய்க்கால்கள் காணி அபகரிப்புக்குள் அகப்பட்டுக் கொண்டதாலும் மழை வெள்ளம் குளத்தைச் சென்றடைய முடியாமல் குடியிருப்புகளிலும் கோவில் வளாகங்களிலும் வீதிகளிலும் தங்கி நின்று தாளம் போடுகின்றது.

இது மட்டுமா? என்றால் இல்லவே இல்லை. இதற்கு மேலாக, மலை போல் உயர்த்தப்பட்ட பெருவீதிகள் மற்றும் புகையிரதப் பாதைகளால் வெள்ளம் கடந்தோட முடியாமல், வீடுகளைத் தேடி வருகின்ற நிட்டூரம் நடந்தாகின்றது.

என்ன செய்வது யாரிடம் போய் முறையிடுவது. வீதியை உயர்த்தி குடியிருப்புக்களைத் தாழ்த்திய கொடுமையை; எங்குமில்லாதவாறு வடக்கில் புகையிரதப் பாதைகளை அதிகளவு உயர்த்திய வீம்பை எங்கு போய்ச் சொல்ல முடியும்.

திட்டமிடல் இல்லாத – மற்றவரின் கருத்தைச் செவிமடுக்காத அபிவிருத்திப் பணிகள் அனர்த்தமேயன்றி வேறில்லை என்பதை இனிமேலாவது சம்பந்தப்பட்டவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதுதான் நம் வினா?

# மரக்கிளை முறிந்து விழுந்து போராட்டப் பந்தல் சேதம்

(நெளுக்குளம்)

வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தமது உறவுகளை மீட்கக்கோரி நடத்தி வரும் போராட்டப் பந்தலுக்கு மேல் மரக்கிளை வீழ்ந்து சேதத்திற்குள்ளாகியுள்ளது.

வவுனியா கண்டி வீதியில் வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு முன்பாக 1384 ஆவது நாளாக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் பந்தல் அமைத்து போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் தாழமுக்கம் காரணமாக ஏற்பட்ட கடும் காற்றினால் பந்தல் அமைந்துள்ள இடத்திற்கு அருகில் காணப்பட்ட மரத்திலிருந்து பாரிய கிளையொன்று முறிந்து வீழ்ந்தமையினால் பந்தல் சேதமடைந்துள்ளது.

குறித்த பந்தலுக்குள் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களான வயோதிப தாய்மார் சிலர் இரவில் தங்கி வருகின்ற போதிலும் அசாதாரண நிலை காரணமாக நேற்று இரவு குறித்த பந்தலுக்குள் எவரும் தங்கியிருக்காமையினால் உயிர்ச் சேதமோ காயமடையும் நிலையோ ஏற்பட்டிருக்கவில்லை.

(5-299)

# பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவிகள் வழங்க ஏற்பாடு

(கரணவாய்)

புரேவி புயல் காரணமாக வல்வெட்டித்துறை ஆதிகோவிலடியைச் சேர்ந்த 53க்கும் மேற்பட்ட வீடுகளும் இரண்டு கடைகளும் முற்று முழுதாகச் சேதமடைந்துள்ளன.

கடற்கரை வீதி, கொத்தியாலடி வீதி கடல் கொந்தளிப்பினால் பெரும் சேதமடைந்துள்ளது.

பொது இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளவர்களுக்கான உதவித் திட்டத்தை கிராம உத்தியோகத்தர், செயலக உத்தியோகத்தர்கள் நகர சபைத் தலைவர், பருத்தித்துறை பிரதேச செயலாளர் மூலமாக அவர்களுக்கு வழங்குவதற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (5-60)

16 2020
பால்நிலை வன்முறைக்கு எதிரான 16 நாள் செயற்பாடு
16 Days of Activism Against Gender Based Violence- 2020
JSAC
இளைஞனே இதயத்தில் இன்றே மாற்றம் கொள்.
இழைக்கப்படும் இன்னல்கள் இன்று முடியட்டும்
நாளைய நல்வாழ்விற்காய் இணைந்தே செயற்படுவோம்.
யாழ்.சமூக செயற்பாட்டு மையம் | Jaffna Social Action Center
ஊடக அனுசரணை: வலம்புரி

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 05 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணிவரை

**யாழ்.பிரதேசத்தில்** புன்னாலைக்கட்டுவன், ஊரெழு, குரும்பசிட்டி, வாகையடி, ஈவினை, வயாவிளான், திண்ணை organic பண்ணை, விக்கிரமரத்ன பிறைவேற் லிமிட்டட், மாவடி, வட்டு இந்துக்கல்லூரி, வட்டுக்கோட்டை, சித்தன்கேணி சந்தி, வில்லூன்றி, நாவாந்துறை, முத்தமிழ் வீதி, மீனாட்சிபுரம், பண்ணை சுற்றுவட்ட வீதி, கண்ணகிபுரம், யாழ்.துரையப்பா விளையாட்டரங்கு, யாழ்.சிறைச்சாலை, யாழ் பொலிஸ் நிலையம் ஆகிய இடங்களிலும்,

**கிளிநொச்சி பிரதேசத்தில்** பரந்தனிலிருந்து பூநகரி ஊடாக கௌதாரி முனை வரை, முக்கொம்பனிலிருந்து அரசபுரம் வரை, நெற்பிலவு, பள்ளிக்குடா, செம்மண்குன்று, ஞானிமடம், கறுக்காய் தீவு, 5V படைப்பிரிவு, பிரதேச செயலகம் பூநகரி, 66 வது படைப்பிரிவு பூநகரி, 66 வது படைப்பிரிவு 2 பூநகரி, இரணைமடு விமானப்படை முகாம் I மற்றும் II ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** இராஜேந்திர குளம் கிராமம், பட்டாணிச்சூரிலிருந்து நெளுக்குளம் சந்தி மற்றும் பம்பைமடு வரை, ஓமேகா லைன், வவுனியா தொழில் நுட்பக் கல்லூரி. சுயன் அரிசி ஆலை, அஷ்வி அரிசி ஆலை, ஸ்ரீரங்கன் அரிசி ஆலை, தெய்வேந்திரம் அரிசி ஆலை, ஜீவன் அரிசி ஆலை, லீலா ஆலை, சந்திரிகா அரிசி ஆலை, நித்தியநகர், மணியர்குளம், எருக்கலங்கல், நித்தியநகர், றங்கீத்கம, வாரிக்குட்டியூர், சங்கரபுரம் ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** உயிலங்குளத்திலிருந்து சிறுநாவற்குளம், கமலாம்பிகை அரிசி ஆலை ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

இனி கொன்றால் பாவம் தின்றால் போகும் என்பதற்குச் சரியான உரை கீழ் வருமாறு,

புலால் உண்டவர்களை யமபடர்கள் நரகத்தில் நிறுத்தி அவர்கள் உடல் தசையை அறுத்து அறுத்து அவர்கள் வாயில் ஊட்டுவார்கள். அதை உண்டால்தான் அவர்கள் கொன்ற பாவம் போகும்.

இந்தக் கருத்தை அருணகிரிநாதர் "புவனத்தொரு... என்று என்று தொடங்குகின்ற திருச்சிராப்பள்ளி திருப்புகழில் இறைச்சி அறுத்து அயில்வித்து என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

எனவே கொன்ற பாவம் தன் உடம்பைத் தானே தின்றால் தான் போகும். (தொடரும்)

## அறிந்துகொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### வீட்டுப்பூசைக் குறிப்புகள்

பூஜை அறையிலோ, வீட்டிலோ தெய்வப் படங்களை கிழக்கு நோக்கி வைக்க வேண்டும். வணங்குபவர் தெற்குப் பகுதியில் வடக்குத் திசையைப் பார்த்தவாறு அமர்ந்து வணங்கலாம். தெற்கு நோக்கி தெய்வப் படங்களை வைக்கக் கூடாது. கிழக்குப் பக்கம் முடியாவிட்டால் தெற்குப் பக்கத்தைத் தவிர பிற திசைகளைப் பார்த்து படங்களை வைக்கவும்.

பூஜை செய்பவர் தெற்கு, தென்கிழக்கு, தென்மேற்கு ஆகிய திசைகளைப் பார்த்து கொண்டு உட்கார்ந்து பூஜை செய்யக்கூடாது.

பூஜை அறையில் அதிக படங்களையும், தெய்வச் சிலைகளையும் வைக்கிறோம் என்பதற்காக அவற்றை நெருக்கமாக வைக்கக் கூடாது. ஒவ்வொரு தெய்வச் சிலைக்கும் இடையில் போதிய இடம் விட்டு வைக்க வேண்டும். (தொடரும்)

# புதிய உத்திகளைப் பயன்படுத்தி பொருளாதாரத்தை வலுப்படுத்துவோம்

## பிரதமர் உறுதி



(கொழும்பு)

புதிய உத்திகளை பயன்படுத்தி நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் பொறுப்பு மற்றும் சவால்களை அரசாங்கம் ஏற்க தயார் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கை வர்த்தக சம்மேளனம் ஏற்பாடு செய்த 2020 ஆம் ஆண்டுக்கான இலங்கை பொருளாதார மாநாட்டில் இணையவழிக் காணொளி ஊடாக நேற்று முன்தினம் புதன்கிழமை கலந்துகொண்ட பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குறித்த மாநாட்டில் அவர் மேலும் கூறியுள்ளதாவது.

உலகிலுள்ள பல நாடுகளையும் விட இலங்கை, கொவிட்-19 தொற்றினை மிகவும் முறையான விதத்தில் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதனை அதிகளவானோர் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

அத்துடன் பொருளாதாரத்தை முறையாக நிர்வகித்து முன்னோக்கி செல்வதற்கு முடியும் என்பதனையும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

அதுமட்டுமன்றி, இதுவரை கொவிட்-19 தொற்றினை கட்டுபாட்டுக்குள் வைத்திருக்கும் நாடுகள் வரிசையில் இலங்கை முன்னிலை வகிப்பதுடன், பல துறைகளிலும் பொருளாதார முன்னேற்றத்தினை சாதகமான முறையில் பதிவு செய்வதற்கு எம்மால் முடிந்துள்ளது.

எமது நாடு எதிர்நோக்கியுள்ள முதன்மையான சவாலானது, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டிற்கு வழங்கிய வாக்குறுதியின்படி மக்களை மையமாகக்கொண்ட பொருளாதார புத்தெழுச்சியினை ஏற்படுத்துவதாகும்.

இதனிடையில் கொவிட்-19 தொற்றுக்கு மத்தியில் மதிப்பிடப்பட்ட பொருளாதார வீதம், அம்முயற்சிக்கு பாரிய தடைகள் உள்ளன எனவும் பலரினால் கணிக்கப்பட்ட போதிலும் அவ்வாறான தடைகள் ஏற்படுவதனை குறைத்து பொருளாதார புத்தெழுச்சியினை ஏற்படுத்துவது எமக்குள்ள பாரிய சவாலாகும்.

இக்குறிக்கோள்களையடைய அரசாங்கம் புதிய உத்திகளை கையாண்டுள்ளது என உங்களுக்கு தெரியும். நாட்டிலுள்ள வர்த்தகர்களை பாதுகாக்கும் பொருட்டு அவர்களுக்காக 'கடன் விலக்குகளை' வழங்குமாறு அரச வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்கினோம்.

அரசாங்கம் என்ற ரீதியில், நாமும் அந்தப் பொறுப்பை ஏற்பதற்கு தயாராகவுள்ளோம்.

அவ்வாறாயின் எம்முடன் இணைந்து, எமது நாட்டின் பொருளாதாரத்தை மறுமலர்ச்சியை நோக்கிக்கொண்டு செல்வதற்கு நாம் உங்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கிறோம்" என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-7)

# சிறையில் உச்ச அதிகாரத்தை பயன்படுத்தியது ஏன்?

## விளக்கம் கூறுகிறார் பாதுகாப்பு செயலர்

(கொழும்பு)

**சமூகத்தில் கொரோனா பாதிப்பை தடுக்கவே சிறையில் உச்சபட்ச அதிகாரத்தை பயன்படுத்த வேண்டியேற்பட்டது என்று பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன தெரிவித்தார்.**

கொழும்பு-தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், மகர சிறைச்சாலையில் இடம்பெற்ற சம்பவத்தால் கைதிகள் சிலர் உயிரிழந்துள்ளதோடு, பலர் காயமடைந்துள்ளதால் சிறைச்சாலை அதிகாரிகள் உயர்மட்ட அதிகாரத்தை பயன்படுத்தியுள்ளதாக சிலர் கூறுகின்றனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் பாதுகாப்பு செயலாளர் என்ற ரீதியில் நான் ஒரு விடயத்தை தெளிவுபடுத்த விரும்புகின்றேன்.

அதிகாரத்தை பயன்படுத்துவதற்காக சிறைச்சாலை கட்டளைச் சட்டத்தில் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கொவிட் தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்ட வேறு இடத்திற்கு மாற்றப்படவிருந்த 186 கைதிகள் சிறைச்சாலையிலிருந்து தப்பிச்சென்று சமூகத்தில் நடமாடுவார்களாயின் அது எந்தளவிற்கு அபாய நிலைமை ஏற்பட்டிருக்கும் என்பதை அனைவராலும் சிந்திக்க முடியும்.

எனவே சமூகத்திற்கு ஏற்படவிருந்த பாரிய பாதிப்பை தடுப்பதற்காக சிறைச்சாலை அதிகாரிகளுக்கு அந்தச் சந்தர்ப்பத்தில் உயர்மட்டத்தில் அதிகாரங்களை உபயோகிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

எனவேதான் வேறு சிறைச்சாலைகளிலிருந்து 200 அதிகாரிகளையும் விசேட அதிரடிப் படையினர் 200 பேரையும் மற்றும் பொலிஸார் 200 பேரையும் சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

சிறைச்சாலை நிலவரத்தை அதிகாரிகள் மீண்டும் தம்வசப்படுத்திக்கொள்ள அவர்கள் உச்சபட்ச அதிகாரத்தைப் பயன்படுத்தினார்கள்.

அதற்கமைய செவ்வாய்க்கிழமை பகல் 1.30 மணியளவில் சிறைச்சாலைக்குள் சென்ற அதிகாரிகள் சுமார் 10 நிமிடங்களில் நிலைமையை வழமைக்கு கொண்டு வந்தார்கள். இதன்போது கைதிகளிடம் காணப்பட்ட மருந்துகள், சமையலறையில் உபயோகிக்கப்படும் கத்திகள் என்பவை அவர்களிடமிருந்து அகற்றப்பட்டுள்ளன" என அவர் தெரிவித்தார். (நி-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2171

**யோசப்**


எங்கள் வீட்டில் எல்லா நாளும் கார்த்திகை...



ஏன் கலண்டர்ல திகதி கிழிக்க மாட்டிங்களா...!

**மீரா**

நாம எதுக்கும் கொஞ்சம் கவனமாகவே தூங்குவோம்...



அடிக்கிற காத்துக்கு டிக்கெற் வாங்காமலே பறந்திடுவம் போல இருக்கு...!

**விஜய்**

நம்மகிட்ட பேசாமலே இருக்கான் பாரு அவனை நம்பலாம்...



அவன் தேவைக்கு மட்டும் நம்மகிட்ட பேசுவான் பாரு... அவன்தான் டேஞ்சர்

**அனிதா**

ஒரு பெண்ணை பார்த்து நிலவைப் பார்த்தேன் நிலவில் ஒளி இல்லை...



அமாவாசை அன்னைக்கு பார்த்திருப்பீங்க..!

**அஸ்வின்**

உங்க பீட்சா, பர்கரை விட...



எங்க பிட்டு வெறித்தனமா இருக்கும்...!

**நிவிதா**

எனக்கு கல்யாணம் ஆகுமா? ஆகாதா? என்று டொஸ் போட்டுப் பார்த்தன்... தலை விழுந்துச்சா இல்லை பூ விழுந்துச்சா. காசு உருண்டு போய் சாக்கடையில் விழுந்திருச்சு...!



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

## புலிகளுக்கு சார்...

தடைசெய்யப்படும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர எச்சரித்துள்ளார்.

இலங்கையில் மீண்டும் விடுதலைப் புலிகள் மீளுருவாகினால் அதற்கான பொறுப்பையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே ஏற்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நேற்றையதினம் பாராளுமன்றத்தில் உரையாற்றியபோதே அவர் இந்த எச்சரிக்கையை விடுத்தார். இதன்போது தொடர்ந்தும் பேசிய அவர்,

பொல்பொட், ஹிட்லர் உட்பட சர்வ தேசத்தில் போராட்டங்களை நடத்தியவர்களின் தலைவர்களது கட்சிகள் முடக்கப்பட்டன.

ஆனால் விடுதலைப் புலிகளின் ஆசீர்வாதத்துடன் ஆரம்பமாகிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதுவரை தடைசெய்யப்படவில்லை.

இதற்கு யுத்தம் முடிந்த பின்னரும் மகிந்த ராஜபக்ஷ வழங்கிய கருணையே காரணம் என்றார். (ம-3)

## ‘புரேவி’ புயல்...

கும் பூநகரிக்கும் இடையிலான பிரதேசத்தின் ஊடாக மன்னார் வளைகுடாவிற்குள் நகர்ந்துள்ளது.

எனினும் பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்குமாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

அந்த நிலையத்தின் பிரதி பணிப்பாளர் பிரதீப் கொடிபிலி வெளியிட்ட அறிக்கையில்,

வடக்கு, வட மத்திய, வடமேற்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மழை பெய்யும்.

எனவே பொதுமக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். மீன்பிடி சமூகம் மறு அறிவித்தல் வரை கடலுக்குச் செல்லக்கூடாது.

சூறாவளியின் விளைவாக கடுமையான தாக்கமோ சேதமோ ஏற்படவில்லை, இருப்பினும் சூறாவளியின் விளைவு முற்றிலுமாக நின்றுவிடும் வரை அனைவரும் விழிப்புடன் இருக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார். (ம-3)

## பருத்தித்துறை...

டுள்ளது என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

தனது மாமி உறவுமுறை ஒருவரின் மருத்துவ சிகிச்சைக்காக கொழும்புக்குச் சென்று அங்கு ஒரு மாதம் தங்கியிருந்த நிலையில் திரும்பிய 34 வயதுடைய குடும்பத் தலைவருக்கே இவ்வாறு கொரோனா தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

அவர் கொழும்பு சென்று திரும்பிய நிலையில் குடும்பத்துடன் கடந்த 14 நாட்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் அந்த குடும்பத் தலைவரின் மாதிரிகள் நேற்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

அவருக்கு கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது. (ம-3,18,60)

## மற்றொரு...

திகதி உருவாகுவதற்கான வாய்ப்பு உள்ளதென யாழ்.பல்கலைக்கழக புவியியற் துறை மூத்த விரிவுரையாளர் ந.பிரதீபராஜா தெரிவித்துள்ளார். (ம-3)

## காணாமல்போன...

8.30 மணியளவில் அவரது சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கடந்த இரு நாட்களுக்கு முன் பொன்னாலை கடலில் தொழிலுக்குச் சென்ற நிலையில் அவர் காணாமற்போயிருந்தார்.

சுழிபுரம்பெரியபுலோவைச்சேர்ந்த செல்வராசா செல்வக்குமார் (வயது-37) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (ம-3)

## வள்ளத்தை மீட்க...

மழை மற்றும் காற்று காரணமாக நந்திக் கடற்கரையில் நிறுத்தி வைத்திருந்த வள்ளம் ஒன்று நந்திக்கடலுக்குள் இழுத்து செல்லப்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்றுக் காலை 10.00 மணிக்கு குறித்த வள்ளத்தை கரைக்கு கொண்டு வருவதற்காக தனது சகோதரனுடன் பிறிதொரு வள்ளத்தில் சென்று காற்றில் அடித்து செல்லப்பட்ட வள்ளத்தில் ஏறியபோது குறித்த வள்ளத்துடன் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளார்.

கேப்பாப்புலவு மாதிரிக் கிராமத்தை சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான 26 வயதுடைய ஜெயசீலன் சிலக்சன் என்பவரே காணாமல் போயுள்ளார்.

சம்பவத்தை தொடர்ந்து கடற்படையினர் இராணுவத்தினர் மீனவர்கள் இணைந்து நந்திக்கடல் களப்பில் குறித்த மீனவரை தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர். (ம-3,281)

## தேசிய தேர்தல்...

பக்ஷவின் பரிந்துரையின் பேரில் புஞ்சி ஹேவவை நியமிக்க பாராளுமன்ற சபை ஒப்புதல் அளித்தது.

புஞ்சிஹேவ தேர்தல் ஆணைக்குழுவின் இயக்குநராக (சட்ட) பணியாற்றி வந்தார்.

அரசியலமைப்பின் 20ஆவது திருத்தத்தின்படி, தேர்தல் ஆணைக்குழுவில் 5 உறுப்பினர்கள் நியமிக்கப்படுவார்கள். 19ஆவது திருத்தத்தின்படி, முன்னைய தேர்தல் ஆணைக்குழு 5 ஐந்து உறுப்பினர்களைக் கொண்டிருந்தது.

இதேவேளை, தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு, பொலிஸ் ஆணைக்குழு, இலஞ்ச ஊழல் ஆணைக்குழு மற்றும் அரச சேவைகள் ஆணைக்குழுவிற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்வைத்த உறுப்பினர்களின் பெயர்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ம-3)

## வெள்ளத்தில்...

வீழ்ந்து உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்றுக் காலை 8 மணியளவில் கொடிகாமம் மத்தி நாகநாதன் வீதியில் இடம்பெற்ற சம்பவத்தில், தவசிகுளம் கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த மகாலிங்கம் மகேஷ் (வயது-28) என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்றுக் காலை 8 மணியளவில் கொடிகாமம் பொலிஸார் வீதியால் சென்றபோது ஒருவர் மயக்கமடைந்த நிலையில் நீரில் கிடந்துள்ளார்.

உடனடியாக அவரை மீட்ட பொலிஸார் அண்மையிலுள்ள மிருசுவில் நாவலடி வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் அங்கு உயிரிழந்துள்ளார். (ம-3,33,60)

## கொரோனாவால்...

இதன்மூலம் நாட்டில் கோவிட் - 19 நோயால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 129ஆக உயர்வடைந்துள்ளது.

ஒக்ரோபர் 4ஆம் திகதிக்கு பின் ஏற்பட்ட மினுவாங்கொட - பேலியகொட கொரோனா பரவல் கொத்தணியின் பின்னர் 116 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் நாட்டில் கொரோனாவால் +627 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நாட்டில் ஜனவரி மாதம் முதல் நேற்று வரை 26 ஆயிரத்து 38 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். (ம-3)

## ‘புரேவி’...

வடக்கை ஊடறுத்துச் சென்ற புரேவி புயல் காரணமாக ஏற்பட்ட மழை மற்றும் சூறாவளியால் வடக்கு மாகாணம் கடுமையாக பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது.

புயலின் பாதிப்பு காரணமாக ஒருவர் உயிரிழந்ததுடன் 6 பேர் காயமடைந்துள்ளனர். மேலும் இருவர் காணாமல்போயுள்ளதாக இடர்முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

அந்த வகையில் புயல் காரணமாக வடக்கில் சுமார் 17 ஆயிரம் குடும்பத்தைச் சேர்ந்த 60 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

50 வீடுகள் முழுமையாக சேதமடைந்ததுடன் 2 ஆயிரத்து 300 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## திருடனின்...

போது வீட்டின் உரிமையாளருக்கு நெஞ்சுவலி ஏற்பட்ட நிலையில் உடனடியாக சுடு தண்ணீர் வைத்து கொடுத்த திருடன் அவரை ஆறுதல்படுத்தியதன் பின் திருடி சென்ற சம்பவம் இடம்பெற்றிருக்கின்றது.

சாவகச்சேரி - கல்வயல் பெருங்குளம் வேதன பிள்ளையார் கோவில் மற்றும் நுணாவில் கந்தசுவாமி கோவில் பகுதிகளில் சுமார் 6 வீடுகளில் நேற்று முன்தினம் இரவு தொடர் கொள்ளை சம்பவம் இடம்பெற்றிருக்கின்றது.

இதில் நுணாவில் வேலங்கேணி கந்த சுவாமி கோவிலடியில் உள்ள வீடொன்றின் கதவுகளை உடைத்துக் கொண்டு திருடர்கள் உள்நுழைந்துள்ளனர்.

இதன்போது வீட்டின் உரிமையாளரான வயோதிபப் பெண்மணிக்கு அதிர்ச்சியில் நெஞ்சுவலி ஏற்பட்டிருக்கின்றது.

உடனடியாக சுடு தண்ணீர் வைத்து கொடுத்த திருடன் அதிர்ச்சியடைந்த பெண்மணியை சாந்தப்படுத்திவிட்டு பின்னர் வீட்டிலிருந்த பொருட்கள், நகைகள், பணத்தை திருடிச் சென்றுள்ளான். (ம-3)


மெகா பவர்
திகதி 03/12/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0692
Z 21 01 16 31 76

வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1635 திகதி 2020.12.03
ஆங்கில எழுத்து E வெற்றி இலக்கங்கள் 05 34 50 71

மஹஜன சம்பத
திகதி 2020/12/03
சீட்டிழுப்பு இலக்கம் 4325
F 7 3 6 0 0 3

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 03.12.2020
சீட்டிழுப்பு இலக்கம் 2620
ஆங்கில எழுத்து Z வெற்றி இலக்கங்கள் 01 18 33 65

தன நிதானய
திகதி -2020.12.03
சீட்டிழுப்பு இலக்கம் -362
J 09 18 27 55

அத கோடிபதி
கிழமை: வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1121
வர்ணம்: கடும் நீலம்
சீட்டிழுப்பு திகதி: 03.12.2020
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 88,046,720
வெற்றி இலக்கங்கள் 28 31 42 74 F

சனிதா
கிழமை: வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3451
வர்ணம்: சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 03.12.2020
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 34,484,703
வெற்றி இலக்கங்கள் 35 41 66 74 G

சுப்பர் ஜக்பொட் 48,63,680/=
திகதி: 03.12.2020
வெற்றி வாரம்: 3002
வர்ணம்: மண்ணிறம்
வெற்றி இலக்கங்கள் 07 13 17 27 கன்னி
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 69,75,840

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1295 நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 03/12/2020 தினம் வியாழன்
அடுத்த சுப்பர் ஜக்பொட் 56,231,786
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் C 16 21 36 75

உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 389 திகதி 03.12.2020 வர்ணம் நீலம்
ஆங்கில எழுத்து N வெற்றி இலக்கங்கள் 08 56 67 6
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 11,305,428
Web: www.dlb.lk

# கரவெட்டி வதிரியில் குடுவுடன் மூவர் கைது

(கரணவாய்)

கரவெட்டி வதிரிப் பகுதியில் குடு போதைப் பொருளுடன் மூவர் நேற்று நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளனர்.

நெல்லியடி பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின்அடிப்படையில் பொலிஸ் புலனாய்வுத்துறையினர் கரவெட்டி வதிரியில் வைத்து குடுவுடன் 3 பேரை கைது செய்துள்ளனர்.

அல்வாய் தெற்கைச் சேர்ந்த 43 வயது உடைய ஒருவர் மற்றும் மட்டக்களப்பைச் சேர்ந்த 18 மற்றும் 19 வயதுடைய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை இன்றைய தினம் பருத்தித்துறை நீதிமன்றத்தில் முன்முன்னிலைப்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-03,60)

# க.பொ.த (சா/த) பரீட்சை 2021 மார்ச் மாதம் நடத்தப்படும்

## கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்

(கொழும்பு)

2021ஆம் ஆண்டுக்கு ஒத்திவைக்கப்பட்ட 2020ஆம் ஆண்டுக்குரிய க.பொ.த சாதாரண தரப் பரீட்சை மார்ச் இறுதிக்குள் நடைபெறும் என்று கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் அறிவித்துள்ளார்.

நேற்று அரசு தகவல் திணைக்களத்தில் நடந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

கல்வி அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது,

கொரோனா வைரஸ் பரவுவதால் நாட்டில் கிட்டத்தட்ட அரைவாசி பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதைக் கருத்தில் கொண்டு க.பொ.த சாதாரண தரப் பரீட்சை ஒத்திவைக்கும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

6 இலட்சத்து 21 ஆயிரம் மாணவர்கள் பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ளனர். தொற்றுநோய் காரணமாக அடுத்த ஆண்டு ஜனவரி 18 முதல் 27 வரை பரீட்சையை நடத்த முடியாது.

பரீட்சையை மேலும் ஒத்திவைக்க நாங்கள் திட்டமிடாததால், மார்ச் மாதத்தில் பரீட்சையை நடத்த கல்வி அமைச்சு எதிர்பார்க்கிறது.

க.பொ.த சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளை ஜூன் மாதத்தில் வெளியிடுவதற்கு திட்டமிட்டுள்ளோம். எனவே மாணவர்கள் 2021 ஜூலை மாதத்தில் உயர்தரத்தில் கல்வியைத் தொடங்கலாம்.

மூன்று மாதங்களுக்குள் முடிவுகளை வெளியிடும் செயல்முறையை யதார்த்தமாக்குவதற்காக, சிறப்புத் திட்டம் தொடங்கப்படும்.

இந்த திட்டத்தின் ஒரு பகுதியாக ஒவ்வொரு பரீட்சை நிலையத்துக்கும் கிருமிநாசினி தயாரிப்புகளை வாங்க 10 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு வழங்கப்படும்.

இந்த காலகட்டத்தில் அரச வேலை விண்ணப்பதாரர்களுக்கான பரீட்சைகள் மற்றும் பிற பரீட்சைகள் போன்றன நடத்தப்படும். மொத்தத்தில் 35 பரீட்சைகளை எதிர்காலத்தில் நடத்த கல்வி அமைச்சு எதிர்பார்த்துள்ளது என்றார். (ம-03)

# கூட்டமைப்பை தடைசெய்ய கோருவதனை எதிர்க்கின்றோம்

## எதிர்க்கட்சி எம்.பி போர்க்கொடி

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தடை செய்ய வேண்டும் என கூறினால் அதனை நாம் எதிர்க்கின்றோம் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டில் சிங்கள, தமிழ், முஸ்லிம் என்ற அனைத்து இன மக்களும் ஒன்றாக வாழ வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நாட்டில் வாழும் சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் உருவ அமைப்பில் ஒன்றானவர்கள். பெயர்கள் மட்டுமே வித்தியாசம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரிவினைவாதத்தை முன்னெடுத்த பிள்ளையான், கருணா போன்றவர்களை சட்டைப் பைக்குள் போட்டுக் கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தடை செய்ய வேண்டுமென கோருவதில் நியாயமில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாட்டின் ஜன நாயக கட்சியொன்றாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-03)

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK- 1025/= Kg
0768226240
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
● நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய்
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம்
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
(C-735)

# ஊரெழு பொக்கணைக் கிணற்றிலிருந்து நீர் வெளியேறியதால் மக்கள் இடம்பெயர்வு

(யாழ்ப்பாணம்)

ஊரெழு பொக்கணைக் கிணற்று நீர்மட்டம் உயர்ந்து கடல்நீர் உள்புகுந்துள்ளதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். பொக்கணை கிணறில் வழிந்தோடும் நீர் கடுமையான சூடாக உள்ளது என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

அத்துடன், அந்தப் பகுதியில்உள்ள குழாய்க் கிணறுகள் மற்றும் கிணறுகளும் நிலமட்டத்துக்கு மேலாக நீர் எழுந்து பாய்கின்றன.

அதனால் நேற்று வியாழக்கிழமை காலை முதல் பொக்கணை கிணற்றை அண்டியுள்ள பகுதி மக்கள் இடம்பெயர்ந்து வருகின்றனர்.

நிஷா புயல் வந்த போது ஏற்பட்ட நிலமை தற்போது புரேவி புயலுக்கும் ஏற்பட்டுள்ளது என்று மக்கள் சுட்டிக்காட்டினர்.

இந்த பொக்கணை கிணறுக்கும் கீரிமலைக்கும் தொடர்பிருக்கின்றது என்றும் சொல்லப்படுகின்றது. கீரிமலைக் கடல் கொந்தளிக்கும் போது இப்பொக்கணை கிணறு வழியாக தண்ணீரை வெளியில் தள்ளுவது வழமை என்று மக்கள் குறிப்பிடுகின்றனர். (ம-03)



நினைவழியா நினைவில்



ஆ. வீரகத்தி சரஸ்வதி வீரகத்தி
திரு. திருமதி வீரகத்தி சரஸ்வதி
உயிர் தந்து
உணர்வு தந்து
உருவம் தந்து
அறிவூட்டி அருங்கலை காட்டி
காலம் கனியும் முன்
விண்ணுலகம் சென்றீர்கள்...
ஆவரங்கால்
(C-826)
மறைந்தும் மறையா நினைவுடன்
மகள் சுலோசனா வீரகத்தி

# போர்க்குற்றம் இடம்பெற்றதாக அரசாங்கம் ஒப்புக்கொள்கின்றதா?

## கஜேந்திரகுமார் எம்.பி சபையில் கேள்வி

(கொழும்பு)

போர்க் குற்றச் செயல்கள் இடம்பெற்றதாக அரசாங்கம் ஒப்புக்கொள்கின்றதா என பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்றைய தினம் பாராளுமன்றில் உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் பாராளுமன்றில் உரையாற்றிய சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த சமரசிங்க மிகவும் பெருமிதத்துடன் "பிரபாகரன் தப்பித்துவிடுவார் என்பதனால் யுத்த வலயத்திலிருந்த சிவிலியன்களை வெளியேற அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச இடமளிக்கவில்லை" என கூறியிருந்தார் என கஜேந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கூறியதன் மூலம் சிவிலியன்கள் யுத்த வலயத்திலிருந்து வெளியேற இடமளிக்காமை போர்க் குற்றச் செயலாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த பாராளுமன்றில் உரையாற்ற தாம் விரும்பவில்லை எனவும் ஏனெனில் மாற்றுக் கருத்துக்களுக்கு இந்த அவையில் இடமில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

2009 ஆம் ஆண்டு மே மாதம் 16ம் திகதி யுத்த வலயத்தில் சிக்கியுள்ள சிவிலியன்களை மீட்பதற்காக தாம் கடுமையாக போராடியதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-03)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.12.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.